மல்கியா 4:2
யோவான் 17:17
நீதியின் சூரியன் உதிக்கும்
அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்
உம்முடைய வசனமே சத்தியம்

# புது உடன்படிக்கை

மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

*Vol. 112* ஜூன் *2025*

## யாக்கோபு தப்பி ஓடுவது மற்றும் ஏணியைப்பற்றிய சொப்பனம் - அடையாளம் மற்றும் நிஜநிறைவேறுதல்

*ஆதி. 27:46 - 28:22*

*PT# 456, Nov-Dec 1961, pp.83,84*

*1. ஆதி. 27:46* <u>பின்பு, ரெபெக்காள் ஈசாக்கை நோக்கி: ஏத்தின் குமாரத்திகளினிமித்தம் என் உயிர் எனக்கு வெறுப்பாயிருக்கிறது; இந்தத் தேசத்துப் பெண்களாகிய ஏத்தின் குமாரத்திகளில் யாக்கோபு ஒரு பெண்ணைக் கொள்வானானால் என் உயிர் இருந்து ஆவதென்ன என்றாள்.</u> யூத யுக அறுவடை காலத்தில், பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்கள் (ஏசா), தேவனால் புறக்கணிக்கப்பட்ட பிறகு, ஆபிரகாம் உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களைப் பிரயோகிப்பவர்களில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அந்த வாக்குத்தத்தங்கள் (ரெபெக்காள்), அவர்களுடைய மனநிலை, வார்த்தைகள் மற்றும் செயல்களின் மூலம், தேவனுடைய அன்பு மற்றும் தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாதமின்மை என்ற இயல்புகளில் செயல்படுகிற தேவனுக்குப் (கண்கள் இருளடைந்த ஈசாக்கு)பின்வரும் காரியங்களைத் தெரிவித்தார்கள்: அவர்களுடைய ஊழியத்தின் செயல் எல்லையில் சுயநலத்தினால் உருவான தீய பண்புகள், விசேஷமாகச் சடங்காச்சாரங்கள் மற்றும் விக்கிரகாராதனை சம்பந்தப்பட்ட முறைக்கேடான இயல்புகள் மற்றும் உலகத்தனமான ஆவி (நிஜநிறைவேறுதலான யூதீத்து மற்றும் பஸ்மாத்- ஆதி. 26:34) பரவலாக இருந்ததினால் அவர்கள் வருத்தப்படுகிறார்கள். ஏனென்றால் பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்கள் (ஏசா), விசேஷமாக அதின் தலைவர்கள் இந்த தீய இயல்புகளோடு தங்களை நெருக்கமாக இணைத்துக் கொண்டிருந்தார்கள் [ரெபெக்காள் ஈசாக்கை நோக்கி: ஏத்தின் குமாரத்திகளினிமித்தம் என் உயிர் எனக்கு வெறுப்பாயிருக்கிறது].

*2.* இதற்குக் கூடுதலாக, அப்போஸ்தலர்களிலும், அவர்களுடைய விசேஷித்த உதவியாளர்களிலும் (பர்னபா மற்றும் சீலா போன்றவர்கள்), எழுபது பேர்களிலும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருந்த ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் (யாக்கோபு) இவ்வித தீய இயல்புகளுடன் தங்களை இணைத்துக் கொண்டார்களேயானால் இந்த ஊழியக்காரரர்கள் (ரெபெக்காள்) இனிமேல் செய்யப் போகிற ஊழியமும் முற்றிலும் விருதாவாய் போய்விடுமென்றும் அவர்கள் தெரிவித்தார்கள் (என் உயிர் இருந்து ஆவதென்ன என்றாள்).

*3. ஆதி. 28:1* <u>ஈசாக்கு யாக்கோபை அழைத்து,</u>



<u>அவனை ஆசீர்வதித்து, நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண்கொள்ளாமல்,...</u> ஆகையால் தேவன் (ஈசாக்கு) தம்முடைய அன்பு மற்றும் தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாதமின்மை என்ற இயல்புகளில் செயல்பட்டு ஆவிக்குரிய இஸ்ரயேலின் இந்த

## தூது நிரல்

1. யாக்கோபு தப்பி ஓடுவது மற்றும் ஏணியைப்பற்றிய சொப்பனம்................1
2. விசுவாச உண்மைத்துவமுள்ளவர்கள் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பரீட்சிக்கப்படுவார்கள்..............................5
3. சங்கீதம் 90...................................................10
4. ஏசாயா 35....................................................12

தலைவர்களின் (யாக்கோபு) விசேஷித்த கவனத்தைக் கோரி(அழைத்து), அவர்களுக்குக் கிருபை, இரக்கம் மற்றும் சத்தியத்தின் கூடுதலான தயவுகளை அளித்தார் (அவனை ஆசீர்வதித்து). மேலும் அவர்கள் எவ்விதமான பாவம், தப்பறை, சுயநலம், உலகத்தனம் ஆகியவற்றுடன் தங்களை இணைத்துக் கொள்ளக் கூடாதென்று அவர்களுக்கு மிக தெளிவாகக் கட்டளையிட்டார் (நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண் கொள்ளாமல்).

*4. ஆதி. 28:2* எழுந்து புறப்பட்டு, பதான் அராமிலிருக்கிற உன் தாயினுடைய தகப்பனாகிய பெத்துவேலுடைய வீட்டுக்குப் போய், அவ்விடத்தில் உன் தாயின் சகோதரனாகிய லாபானின் குமாரத்திகளுக்குள் பெண்கொள் என்று அவனுக்குக் கட்டளையிட்டான். ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் இந்த தலைவர்கள் (யாக்கோபு)யூத மத அமைப்பின் செயல் எல்லையை விட்டுவிட்டு (எழுந்து புறப்பட்டு), பெயரளவிலான கிறிஸ்தவ சபையின் செயல் எல்லைக்குச் (பதான் அராம் - உயர்வான சமவெளி) செல்ல வேண்டியதாயிருந்தது. அது “ஒரு வித கருத்தில் தெரிந்து கொள்ளப்பட்ட” வகுப்பாரின் (*Quasi-elect* ,பெத்துயேல்) செயல் எல்லையாக இருந்தது (வீடு). அந்த வகுப்பாரிலிருந்து நிஜ நிறைவேறுதலான ரெபெக்காள் வகுப்பாரும் உருவாகி இருந்தார்கள் (உன் தாயினுடைய தகப்பன்). அந்த செயல் எல்லையில் அவர்கள் சில சுவிசேஷ யுக சத்தியங்களையும், சத்திய ஊழியக்காரர்களையும் கண்டு கொண்டு, அவர்களுடன் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டியதாயிருந்தது (பெண் கொள்). இந்த சத்திய ஊழியக்காரர்கள் சுவிசேஷ யுகத்தின் பெயரளவிலான தேவ ஜனங்களின் சில தலைவர்களின் (லாபான்) உருவகமான பிள்ளைகளாயிருந்தார்கள். இந்த தலைவர்களுக்கு நிஜ நிறைவேறுதலான ரெபெக்காளுடன் நெருங்கிய பந்தமிருந்தது (தாயின் சகோதரன்).

*5. ஆதி. 28:3,4* சர்வவல்லமையுள்ள தேவன் உன்னை ஆசீர்வதித்து, நீ பல ஜனக்கூட்டமாகும்படி உன்னைப் பலுகவும் பெருகவும்பண்ணி; தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்ததும் நீ பரதேசியாய்த் தங்குகிறதுமான தேசத்தை நீ சுதந்தரித்துக்கொள்ளும்படி ஆபிரகாமுக்கு அருளிய ஆசீர்வாதத்தை உனக்கும் உன் சந்ததிக்கும் அருளுவாராக என்று சொல்லி;… தேவனுடைய ஞானம், நீதி மற்றும் வல்லமை என்ற இயல்புகளில் அவர் (சர்வ வல்லமையுள்ள தேவன்) ஆவிக்குரிய இஸ்ரயேலின் தலைவர்கள் (யாக்கோபு) இவ்விதமாக இணைவதை அபரிமிதமாக ஆசீர்வதித்து, அவர்களைச் செழிப்படையச் செய்ய வேண்டுமென்று தம்முடைய அன்பு மற்றும் தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாதமின்மை என்ற இயல்புகளில் தேவன் (ஈசாக்கு) ஆர்வமாக விரும்பினார் (ஆசீர்வதித்து). தேவன் அவர்களுக்கு அதிக எண்ணிக்கையில் உருவகமான பிள்ளைகளைக் கொடுத்து, (பலுகவும் பெருகவும் பண்ணி) ஆபிரகாம் உடன்படிக்கையில் அவர் செய்த வாக்குத்தத்தத்திற்கு இணக்கமாக, அவர்களுக்கும் அவருடைய உருவகமான சந்ததியாருக்கும் காலத்திற்குரிய சத்தியம் மற்றும் அதின் ஆவியின் செயல் எல்லையைக் கொடுக்க வேண்டுமென்றும் விரும்பினார் (தேசத்தை நீ சுதந்தரித்துக் கொள்ளும்படி). ஏனென்றால் அந்த செயல் எல்லையை அவர்களுக்குக் கொடுப்பதாக, தேவன் தம்முடைய ஞானம், நீதி மற்றும் வல்லமை என்ற இயல்புகளில் செயல்பட்டு, தம்முடைய விசுவாச உண்மைத்துவமுள்ள ஊழியக்காரர்களில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருந்த தம்முடைய அன்பென்ற இயல்பில் தமக்கே வாக்குத்தத்தம் செய்திருந்தார்.

*6. ஆதி. 28:5* ஈசாக்கு யாக்கோபை அனுப்பிவிட்டான். அப்பொழுது அவன் பதான் அராமிலிருக்கும் சீரியா தேசத்தானாகிய பெத்துவேலுடைய குமாரனும், தனக்கும் ஏசாவுக்கும் தாயாகிய ரெபெக்காளின் சகோதரனுமான லாபானிடத்துக்குப் போகப் புறப்பட்டான். இதற்கிணக்கமாக யூத யுக அறுவடை காலத்தில், தேவன் (ஈசாக்கு) தம்முடைய அன்பு மற்றும் தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாதமின்மை என்ற இயல்புகளில் செயல்பட்டு, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் தலைவர்களைத் (யாக்கோபு) துன்புறுத்திக் கொண்டிருந்த மாம்ச இஸ்ரயேலர்களிடமிருந்தும் (ஏசா) அவர்களுடைய செயல் எல்லையிலிருந்தும் தூரமாக அனுப்பிவிட்டார். அவர்களும் அவ்வாறு புறப்பட்டு சுவிசேஷ யுகத்தின் "இடைப்பட்ட காலத்தின்" பெயரளவிலான கிறிஸ்தவ சபையின் செயல் எல்லைக்கு வந்தார்கள் (பதான் அராமுக்கு). அங்கே அவர்கள் பேர் சபையின் சில தலைவர்களைச் (லாபான்) சந்தித்தார்கள். அந்த தலைவர்கள் ஒரு வித கருத்தில் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் (பெத்துயேல்) உருவகமான பிள்ளைகளாயிருந்தார்கள். அவர்கள் ஆபிரகாம் உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் மற்றும் அவைகளைப் பிரயோகிப்பவர்களுடன் (ரெபெக்காள்) நெருங்கிய பந்தமுடையவர்களாயிருந்தார்கள். இந்த வாக்குத்தத்தங்கள் மற்றும் அவைகளை பிரயோகிப்பவர்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கும் மாம்ச இஸ்ரயேலர்களுக்கும் தாயாகச் செயல்பட்டிருந்தார்கள் (தனக்கும் ஏசாவுக்கும் தாய்).

*7. ஆதி. 28:6,7* ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து, ஒரு பெண்ணைக் கொள்ளும்படி அவனைப் பதான் அராமுக்கு அனுப்பினதையும், அவனை ஆசீர்வதிக்கையில்: நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண்கொள்ளவேண்டாம் என்று அவனுக்குக் கட்டளையிட்டதையும், யாக்கோபு தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும் கீழ்ப்படிந்து, பதான் அராமுக்குப் புறப்பட்டுப்போனதையும் ஏசா கண்டதினாலும்,… தேவனுடைய அன்பு மற்றும் தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாதமின்மை என்ற இயல்புகளில் அவர்(ஈசாக்கு) ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் இந்த தலைவர்களுக்கு (யாக்கோபு)விசேஷித்த தயவுகளை அளித்துக் கொண்டிருப்பதைப் பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்களின் தலைவர்களில் சிலர் உணர்ந்தார்கள் (ஏசா கண்டதினால்). மேலும் யூத மத செயல் எல்லையை விட்டுவிட்டு, அப்பொழுது அபிவிருத்தியடைந்து கொண்டிருந்த பெயரளவிலான கிறிஸ்தவ சபையின் செயல் எல்லைக்குள் செல்ல தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டதையும் அவர்கள் உணர்ந்தார்கள். மேலும் அங்கே அவர்கள் சில சத்தியங்களுடனும் ஊழியக்காரர்களுடனும் தங்களை இணைத்துக் கொள்ள தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டதையும் உணர்ந்தார்கள். மேலும் அவர்கள் மாம்ச இஸ்ரயேலர்கள் செய்ததைப் போல் பல விதமான பாவம், தப்பறை, சுயநலம், உலகத்தனம் ஆகியவற்றுடன் தங்களை இணைத்துக் கொள்ளக் கூடாதென்று தேவன் அவர்களிடம் கண்டிப்புடன் கூறினதையும் உணர்ந்தார்கள். மேலும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் இந்த தலைவர்கள், அந்த கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணியை நிறைவேற்றுவதற்கு யூத மத அமைப்பின் செயல் எல்லையை விட்டு புறப்பட்டுக் கொண்டிருப்பதையும் உணர்ந்தார்கள்.

*8. ஆதி. 28:8,9* கானானியருடைய குமாரத்திகள்

தன் தகப்பனாகிய ஈசாக்கின் பார்வைக்கு ஆகாதவர்கள் என்பதை ஏசா அறிந்ததினாலும், ஏசா இஸ்மயேலிடத்துக்குப் போய், தனக்கு முன்னிருந்த மனைவிகளுமன்றி, ஆபிரகாமுடைய குமாரனாகிய இஸ்மயேலின் குமாரத்தியும் நெபாயோத்தின் சகோதரியுமாகிய மகலாத்தையும் விவாகம்பண்ணினான். ஆகையால் யூத மதத்தின் இந்த தலைவர்கள் (ஏசா) பலவகையான பாவம், தப்பறை, சுய நலம், உலகத்தனத்துடன் தங்களை இணைத்துக் கொள்வது, தேவனுடைய அன்பு மற்றும் தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாதமின்மை என்ற இயல்புகளில் அவருக்குப் (ஈசாக்கு) பிரியமாயிராததை அந்த தலைவர்கள் உணர்ந்து, தேவனுடைய தயவைத் திரும்பப் பெற்றுக் கொள்ள பிரயாசம் பண்ணத் தொடங்கினார்கள். ஆகையால் யூதர்களின் சரித்திரம், பழக்க வழக்கங்கள், ஆகியவற்றின் செயல் எல்லைக்குச் சென்று நியாயப்பிரமாணம் மற்றும் அவர்களுடைய பாரம்பரியத்தின் (தல்மூத் முதலியவைகள்) கலவையான ஒன்றுடன் தங்களை நெருக்கமாக இணைத்துக் கொண்டார்கள் [மகலாத் (நோய்)]. பாரம்பரியம் மற்றும் நியாயப்பிரமாணத்தின் இந்த கலவை மாம்ச இஸ்ரயேலின் (இஸ்மயேல்) உருவகமான குமாரத்தியாயிருந்தது. மேலும் யூதா மற்றும் பென்யமீன் என்னும் இரு கோத்திரங்களுடைய ராஜ்யத்திற்கு நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது (நெபாயோத்தின் சகோதரி). பாரம்பரியம் மற்றும் நியாயப்பிரமாணத்தின் இந்த கலவையோடு தங்களை நெருக்கமாக இணைத்துக் கொள்வதின் மூலம் திரும்பத் தேவனுடைய தயவைப் பெற யூத மத தலைவர்கள் எதிர்பார்த்தார்கள். மேலும் அவர்கள் இவ்வாறு இணையும்போது, தாங்கள் ஏற்கனவே தங்களை இணைத்துக் கொண்டிருந்த சடங்காச்சாரங்கள், விக்கிரகாராதனை சம்பந்தப்பட்ட முறைக்கேடான இயல்புகள் மற்றும் உலகத்தனமான ஆவிக்கு கூடுதலாக இவைகளோடும் தங்களை இணைத்துக் கொண்டார்கள் (தனக்கு முன்னிருந்த மனைவிகளுமன்றி).

*9. ஆதி. 28:10,11* யாக்கோபு பெயெர்செபாவை விட்டுப் புறப்பட்டு ஆரானுக்குப் போகப் பிரயாணம் பண்ணி, ஒரு இடத்திலே வந்து, சூரியன் அஸ்தமித்தபடியினால், அங்கே ராத்தங்கி, அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்து, தன் தலையின்கீழ் வைத்து, அங்கே நித்திரை செய்யும்படி படுத்துக்கொண்டான். ஏற்கனவே பார்த்ததைப் போல் (ஆதி. 28:5; 27:43-ம் வசனத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்), யூத யுக அறுவடை காலத்தில் அப்போஸ்தலர்களும், அவர்களுடைய விசேஷித்த உதவியாளர்களும், எழுபது பேர்களும் தேவனுடைய நியாயப்பிரமாண உடன்படிக்கையின் ஜனமாகிய யூத யுக அமைப்பின் செயல் எல்லையை (பெயர்செபா) விட்டு, இடைப்பட்ட காலத்தின் பரீட்சார்த்த ரீதியாக நியாயமாக்கப்பட்டவர்களின் செயல் எல்லையை (ஆரான்) நோக்கி பிரயாணம் செய்யத் தொடங்கினார்கள். ஆனால் இந்த தலைவர்கள் இந்த செயல் எல்லையைச் சென்றடைவதற்கு முன்பே, வேறொரு செயல் எல்லைக்கு வந்து, தற்காலிகமாக அங்கே தங்கி இருந்தார்கள். அது யூத யுக அறுவடைகாலத்தின் முடிவில் வந்த விசேஷித்த சோதனையின் காலமாக இருந்தது (இராக் காலம்). அந்த சோதனை காலத்தில் அவர்களுக்கு இளைப்பாறுதல் அளிக்கும் கோட்பாடுகளின் அடிப்படையை ஆயத்தம் செய்து கொள்வதற்கு, அவர்கள் மீட்கும் பலியை பற்றிய போதனையை எடுத்துக் கொண்டு (கற்களில் ஒன்றை எடுத்து) அதை அவர்களுடைய சத்தியத்தின் புரிந்து கொள்ளுதலின் அடிப்படையாக ஆக்கிக் கொண்டார்கள் [தலையின் கீழ் வைத்து (தலையணை; 2 கொரி. 5:14, 15; 1 தீமோ. 2:5, 6; எபி. 2:9 வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் - பரிசுத்த பவுல் அவரைத் துன்புறுத்தின யூத மத அமைப்பை விட்டு புறப்பட்ட பிறகும், யூத யுக அறுவடை முடிவடைவதற்கு முன்பும் இவ்வசனங்கள் எழுதப்பட்டிருந்தன – அப். 9:23-25)] அதற்குப் பிறகு அவர்கள் காலத்திற்குரிய இந்த சத்தியத்தை; அந்த செயல் எல்லையில் அவர்களுக்கிருந்த சோதனையின் காலத்தில் அவர்களுடைய இருதயம் மற்றும் மனம் இளைப்பாறும் இடமாக ஆக்கிக் கொண்டார்கள் (நித்திரை செய்யும்படி படுத்துக் கொண்டார்கள்).

## யாக்கோபு கண்ட ஏணியின் சொப்பனம்

*10. ஆதி. 28:12* அங்கே அவன் ஒரு சொப்பனங் கண்டான்; இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள். ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் இந்த தலைவர்கள்(யாக்கோபு), அந்த சோதனையின் காலத்தில், காலத்திற்குரிய சத்தியத்தின்மேல், விசேஷமாக மீட்கும் பலி கோட்பாட்டின்மேல் இளைப்பாறிக் கொண்டிருக்கையில், காலத்திற்குரிய சத்தியத்தின் அதிசயமான மற்றும் உற்சாகமளிக்கும் விசேஷித்த தெளிவைப் பெற்றுக் கொண்டார்கள் (ஒரு சொப்பனம் கண்டான்). ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் தலைவர்களின் மூலமும், அவர்களுடைய உருவகமான பிள்ளைகளின் மூலமும் பூமியின் சகல ஜாதிகளையும் ஆசீர்வதிப்பதற்காக ஆபிரகாம் உடன்படிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய திட்டத்தின் நிறைவேறுதலைக் கண்டார்கள். அதன் மூலம் அவர்கள் பின்வரும் காரியங்களைத் தெளிவாகப் புரிந்து கொண்டார்கள்: (1)மனுஷ குமாரரின் மீட்கும் பலியின் விளைவாக, கிறிஸ்து வகுப்பாரின் தலைவராக அவரும், அவருக்குக் கீழ்ப்பட்ட நிலையில் அவருடைய சரீர அங்கத்தினர்களும், ஏற்ற காலத்தில், மனுகுலத்திற்கும் பரலோக ராஜ்யத்திற்கும் இடையிலுள்ள தொடர்பின் அடிப்படையாக இருப்பார்கள் (ஏணி ; யோவா. 1:51; 1 தீமோ. 2: 5,6; P. Vol 4, பக்கம் 629); (2) இறுதியாக இந்த அடிப்படையில் மனுகுலத்திற்கும் ராஜ்யத்தின் பரத்துக்குரிய பகுதிக்கும் இடையில் ஏற்படுத்தப்படும் தொடர்பில் சுறுசுறுப்பாக உழைக்கும் தேவனுடைய ஊழியக்காரர்களும் இருப்பார்கள் (அதிலே தேவ தூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாயிருந்தார்கள் - மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்கள், மற்றும் ஆவிக்குரிய ராஜ்யத்தில் திரள் கூட்டத்தார்; வெளி. 7:15). மனுஷ குமாரரின் மா உன்னத மீட்கும் பலியின் நிமித்தம் மனுகுலத்திற்கும் பரத்துக்குரிய ராஜ்யத்திற்கும் இடையிலிருக்க போகிற இசைவிணக்கத்தின் எதிர்பார்ப்பிற்காகத் தேவனுக்கு நன்றி கூறுவோம்!

*11. ஆதி. 28:13,14* அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று: நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். இறுதியாகக் கிறிஸ்து வகுப்பார் யாவே தேவனுக்கும் (அதற்கு மேலாகக் கர்த்தர்

நின்று) மனுகுலத்திற்கும் இடையிலிருக்கப் போகிற தொடர்பின் அடிப்படையாகவும் இருப்பார்களென்று அந்த தலைவர்கள் (யாக்கோபு)ஏற்ற காலத்தில் தெளிவாக் கப்பட்ட சத்தியத்தின் மூலம் புரிந்து கொண்டார்கள். தேவன் தம்முடைய ஞானம், நீதி மற்றும் விசேஷமாக வல்லமை என்ற இயல்புகளில் செயல்பட்டு, அவர் களுக்குப் பின்வரும் காரியங்களைக் குறித்து உறுதி யளித்தார்: (1) தேவனுடைய அன்பென்ற இயல்பில் அவரும், அவருடைய அன்பென்ற இயல்பில் கர்த்தராகிய யெஷுஆ கிறிஸ்துவும் அங்கீகரிக்கிற ஈடற்ற உச்ச நிலையில் உன்னதமான தேவன் அவரே (ஞானம், நீதி மற்றும் விசேஷமாக வல்லமை என்ற இயல்புகளில்,) (2) அவர்கள் அப்பொழுது இளைப்பாறிக் கொண்டிருந்த காலத்திற்கேற்ற சத்தியம் மற்றும் அதின் ஆவியின் செயல் எல்லையில் (நீ படுத்திருக்கிற பூமி) தேவன் அவர் களுக்கும் அவர்களுடைய உருவகமான சந்ததிக்கும் (வித்து) கொடுப்பார், (3) இந்த சந்ததி(வித்து) இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பாரில் பலுகி, மனுஷர் மத்தியில் உலகமெங்கும் பரவும் வரை பெருகுவார்கள், (4) இவ் வாறாக அவர்களுடைய உருவகமான சந்ததியின் மூலம் தேவனுடைய ஆசீர்வாதங்கள் முழு மனுகுலத்திற்கும் செல்லும்.

*12.* இதன் சம்பந்தமாக ஒரு காரியத்தை விசேஷ மாகக் கவனிப்போம்: யாக்கோபின் வித்து "பூமியின் தூளைப்போல் இருக்கும்" என்று மட்டுமே தேவன் அவருக்கு வாக்குத்தத்தம் செய்ததைக் கவனிப்போம். யாக்கோபின் வித்து "வானத்தின் நட்சத்திரங்களைப் போல்" இருக்குமென்று தேவன் அவரிடம் ஒருபோதும் சொன்னதில்லை. ஆனால் ஈசாக்கின் வித்து "வானத்தின் நட்சத்திரங்களைப் போல்" இருக்குமென்று தேவன் ஈசாக்குக்கு வாக்குத்தத்தம் பண்ணினார் (ஆதி. 26:4,5). ஈசாக்கின் வித்து பூமியின் தூளைப்போலவோ கடற் கரையின் மணலை போலவோ இருப்பதாகத் தேவன் அவரிடம் ஒரு போதும் சொன்னதில்லை. இது, நாம் இங்கே பார்த்துக் கொண்டிருக்கிற நிறைவேறுதலைவிட வேறொரு நிஜ நிறைவேறுதலின் சூழ்நிலையில் யாக் கோபுக்கு விசேஷமாகப் பொருந்தும். அதில் அவர் பூமிக்குரிய ஒரு வகுப்பாகிய மாம்ச இஸ்ரயேலை அடையாளப்படுத்துகிறார் (ரோம.11:26). இது, அந்த சூழ்நிலையில் ஈசாக்கின் நிஜ நிறைவேறுதலுக்கும் விசேஷமாகப் பொருந்தும். அதில் அவர் ஆவிக்குரிய, பரத்துக்குரிய வகுப்பாராகிய கிறிஸ்து வகுப்பாரை அடையாளப்படுத்துகிறார் (R3965).

*13.* ஆதி. 28:15 <u>நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்</u>. மேலும் யூத யுக அறுவடை யில் அப்போஸ்தலர்கள், அவர்களுடைய விசேஷித்த உதவியாளர்கள், எழுபதுபேர்கள் ஆகிய தலைவர்களில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அவருடைய விசுவாச உண்மைத்துவமுள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்குத் (யாக்கோபு) தேவன் பின்வரும் காரியங்களைக் குறித்து உறுதியளித்தார்: (1) தேவனுடைய ஆவி, வார்த்தை பரிபாலனங்களின் மூலம் அவர் தொடர்ந்து இடை விடாமல் அவர்களோடிருப்பார் (நான் உன்னோடே இருந்து), (2) அது முதல் இடைப்பட்ட காலம் முழுவதும் அவர்கள் செய்யும் பிரயாணத்தின் எல்லா சூழ்நிலை களிலும் காலகட்டங்களிலும் தேவன் அவர்களைப் பாதுகாப்பார் (நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து – மத். 28:20 வசனத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்போம்); (3) இறுதியாகத் தேவன் அவர்களைச் சுவிசேஷ யுக அறுவடையில் திரும்ப அறுவடை சத்தியம் மற்றும் அதின் ஆவியின் செயல் எல்லைக்குக் (யூத யுக அறுவடை காலத்திலிருந்ததைப் போலவே) கொண்டு வருவார் (இந்த தேசத்திற்கு உன்னைத் திரும்ப வரப் பண்ணுவேன்), (4) இடைப்பட்ட காலத்தில் ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் சம்பந்தப்பட்ட தேவனுடைய நோக்கங்களெல்லாம் நிறை வேற்றப்படும் வரை தேவன் தொடர்ந்து அவர்களோ டிருப்பார் (நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை).

*14.* ஆதி. 28:16 <u>யாக்கோபு நித்திரை தெளிந்து விழித்தபோது: மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்; இதை நான் அறியாதிருந்தேன் என் றான்.</u> ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் இந்த தலைவர்கள் யூத யுக அறுவடை காலத்தின் இறுதியில் வந்த அந்த சோதனையின் காலத்தில் காலத்திற்கேற்ற சத்தியத்தின் மேல் விசேஷமாக இளைப்பாறிக் கொண்டு, அந்த காலத்திற்குரிய சத்தியத்தின் கூடுதலான, அதிசயமான விசேஷித்த தெளிவைப் பெற்றுக் கொண்டார்கள். அந்த சோதனையின் காலம் முடிவடைந்து, அந்த காலத்திற் குரிய சத்தியத்தை முழுமையாகப் பெற்றுக் கொண்ட பிறகு, அவர்கள் அந்த சத்தியத்தின் அழகையும், மாட்சிமையையும், மற்றும் அதில் வெளிப்படுத்தப்பட்ட தெய்வீக குணாம்சத்தின் மகிமையையும் கண்டுணர்ந்து, வியப்புடன் அவர்களுடைய மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம் இவ்வாறு கூறினார்கள்: அவர்கள் அதுவரை முழுமையாக உணராத அளவிற்கு அந்த செயல் எல்லையில் தேவன் உண்மையாகவே அவருடைய ஞானம், நீதி மற்றும் வல்லமை என்ற இயல்புகளில் அவர்களோடே இருந்தார்.

*15.* ஆதி. 28:17 <u>அவன் பயந்து, இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது! இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல, இது வானத்தின் வாசல் என்றான்.</u> ஆவிக்குரிய இஸ்ரயேலின் இந்த தலைவர்கள் பெற்றுக் கொண்ட சத்தியத்தின் இந்த தெளிவின் நிமித்தம் அவர்கள் பணிவோடு கூடிய அச்சத்தை உணர்ந்தார்கள் (அவன் பயந்து). அவர்கள் இருந்த செயல் எல்லையானது போற்றி துதிக்கும் பயபக்தியைக் கோரும் செயல் எல்லையாக இருப்பதை அவர்கள் உணர்ந்தார்கள். ஏனென்றால் அது நிச்சயமாகத் (1) தேவன் அவர்களோடு வாசம் பண்ணி, அவர்களோடு ஐக்கியங் கொண்டு, அவர்களை ஆசீர்வதிக்கும் இடமாக இருந்தது (தேவ னுடைய வீடு), (2) தேவனுடைய ஜனங்களுக்கு ராஜ்யத் திற்குச் செல்லும் வழியை காண்பிக்கும் செயல் எல்லையாகவும் இருந்தது (வானத்தின் வாசல்).

*16.* ஆதி. 28:18,19 <u>அதிகாலையிலே யாக்கோபு எழுந்து, தன் தலையின்கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தி, அதின்மேல் எண்ணெய் வார்த்து, அந்த ஸ்தலத்திற்குப் பெத்தேல் என்று பேரிட்டான்; அதற்கு முன்னே அவ்வூருக்கு லூஸ் என்னும் பேர் இருந்தது</u>. இவ்வாறாக இந்த தலைவர்கள் யூத யுக அறுவடையின் இறுதியில் அந்த காலத்திற்குரிய சோதனை முடிவுக்கு வந்து, இடைப்பட்ட காலத்தின் சூழ்நிலையை நோக்கி அவர்கள் செய்யும் நிஜ நிறை வேறுதலான பிரயாணத்தின் அடுத்த கட்டத்தைத் தொடங்கினார்கள். இந்த பிரயாணத்தைத் தொடங்கு வதற்கு முன்பே, அவர்கள் அவர்களுடைய சத்தியத்தின் புரிந்து கொள்ளுதலின் அடிப்படையாக ஆக்கிக் கொண்டிருந்த மீட்கும் பலியின் கோட்பாட்டை

உறுதியாகப் பற்றிக் கொண்டார்கள் (தன் தலையின்கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து). மேலும் அதை ஞாபகத்தில் வைக்கப்படவேண்டிய, மா உன்னத கோட்பாட்டின் போதனையாக ஸ்தாபித்தார்கள் (அதைத் தூணாக நிறுத்தி). மேலும் அவர்கள் அந்த கோட்பாட்டைப் பரிசுத்தமான ஒரு கோட்பாடாக ஆக்கினார்கள் (அதின் மேல் எண்ணெய் வார்த்து). அந்த செயல் எல்லை முற்காலத்தில் தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனமாகிய மாம்ச இஸ்ரயேலின் செயல் எல்லையாக இருந்திருந்தாலும் [லூஸ் (வாதுமை மரம்); அதற்கு முன்னே அவ்வூருக்கு லூஸ் என்னும் பேர் இருந்தது], அவர்கள் இப்பொழுது அதைத் தேவன் அவர்களோடு ஐக்கியங் கொண்டு, அவர்களோடு வாசம் பண்ணி, அவர்களுக்கு ஆசீர்வாதங்களை அளிக்கும் விசேஷித்த செயல் எல்லையின் இடமாக இருந்ததென்று அறிவித் தார்கள் பெத்தேல் (தேவனுடைய வீடு)].

*17. ஆதி. 28:20-22* <u>அப்பொழுது யாக்கோபு: தேவன் என்னோடே இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி, உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து, என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பிவரப் பண்ணுவாரானால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார்; நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசம பாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனை பண்ணிக்கொண்டான்.</u> அப்போஸ்தலர்களிலும், அவர் களுடைய விசேஷித்த உதவியாளர்களிலும், எழுபது பேர் களிலும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட தேவனுடைய விசுவாச உண்மைத்துவமுள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலர் கள் பின்வரும் காரியங்களை ஆர்வத்துடனும் உறுதியாக வும் கூறினார்கள்: (1) தேவனுடைய ஞானம், நீதி மற்றும் வல்லமை என்ற இயல்புகளில் அவர் விசுவாச உண்மைத் துவமுள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் தலைவர் களோடே கூட பிரயாணம் <u>செய்வார் (தேவன் என்னோடே இருந்து)</u>, (2) இடைப்பட்ட காலத்தில் அவர்கள் நெருக்க மான பாதையில் செய்யும் பிரயாணத்தில் அவர்களைப் பாதுகாப்பார்(நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி), (3) அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவனை நீடிக்கச் செய்வதற்கு அவர்களுக்குத் தேவையான காலத்திற்குரிய சத்தியத்தையும், கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தையும் கொடுப்பார்(உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து), (4) இறுதியாகச் சுவிசேஷ யுகத்தின் முடிவில் அவர்கள் காலத்திற்கேற்ற அறுவடை சத்தியத்தின் செயல் எல்லைக்குள் திரும்ப வருவார்கள் (என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பிவரப்பண்ணுவாரானால்). அப்பொழுது அவர்கள் அவருடைய ஞானம், நீதி மற்றும் வல்லமையில் அவரை அவர்களுடைய சர்வ வல்லமையுள்ள தேவனாக விசே ஷித்த விதத்தில் அங்கீகரிப்பார்கள். (5) மேலும் எப் பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளப்பட வேண்டிய மா உன்னத கோட்பாடு ரீதியான போதனை யாக அவர்கள் ஸ்தாபித்து, பரிசுத்தமாக்கி இருந்த மீட்கும் பலியின் போதனையை, அவர்கள் தேவனுடைய வீட்டின் அடிப்படையாக அங்கீகரிப்பார்கள் (நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்). அதாவது தேவன் அவருடைய ஜனங்கள் அனைவருடன் ஐக்கியங் கொண்டு, அவர்களோடு வாசம் பண்ணி அவர்களை ஆசீர்வதிக்கும் இடத்தின் அடிப்படையாக மீட்கும் பலியின் போதனையை அங்கீகரிப்பார்கள். (6) மேலும் அவர்களுடைய பிரதிஷ்டையை நிறைவேற்றுவதில், தங்க ளுடைய மனுஷீகம் முழுவதையும், தங்களிடமிருந்த அல்லது தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ள எதிர் பார்த்த அனைத்தையும் தேவனுடைய நோக்கத்தின் நலனுக்காக விசுவாச உண்மைத்துவத்துடன் பலி செய்வார்கள் (தசம பாகம் செலுத்துவேன்).

*18.* இவ்வாறாக நாம் ஏணியைக் குறித்து யாக்கோபு கண்ட நேர்த்தியான சொப்பனத்தில் அடை யாளம் மற்றும் நிஜ நிறைவேறுதலின் ஆராய்வை முடிக்கிறோம். மனுஷ குமாரன் மற்றும் அவருடைய மா உன்னத மீட்கும் பலியின் அடிப்படையில், வானத்துக்கும் பூமிக்கும் இடையில் இசைவிணக்கத்தைத் திரும்ப நிலைநாட்டுவதற்குத் தேவன் ஏற்பாடு செய்த மேன்மை யான திட்டம் அதில் வெளிப்படுவதை நாம் காணும் போது, நிஜ நிறைவேறுதலான யாக்கோபின் காரியத்தில் நடந்ததை போலவே, அது நம்மிலும் போற்றிதுதிக்கும் பக்தியும் பணிவும் கலந்த பயத்தை நம்மில் தூண்டுகிறது. தேவனுக்கு ஸ்தோத்திரம்!

★★★★★★★★★★★★★★★★★★★★

# விசுவாச உண்மைத்துவமுள்ளவர்கள் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பரீட்சிக்கப்படுவார்கள்

***PT# 345, Aug 1947, p. 114***

*1.* மூப்பரான பாத்திரவான்களின் சரித்திரங் களைப் பார்க்கும் போது அவர்களுடைய கீழ்ப்படிதலின் அளவுக்கும் திறமைக்கும் தக்கவாறு தேவனிடத்தில் விசேஷித்த விசுவாசத்தை அப்பியாசித்த அவருடைய ஜனங்களை அவர் தேடி, ஏற்றுக் கொண்டு, உற்சாகப் படுத்திப் பரீட்சித்தாரென்று நாம் காண்கிறோம். இதைக் கண்டு நாம் ஆச்சரியப்படக் கூடாது: ஏனென்றால் விழுந்துபோன மனுகுலத்தின் ஒரு அங்கத்தினரில் தேவன் வேறெந்த பண்பைத் தேடக்கூடும்? நிச்சயமாக அவர் பூரணத்துவத்தைத் தேட முடியாது. ஏனென்றால் "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்று அவருடைய வார்த்தையே மிக தெளிவாக அறிவிக்கிறது (ரோம.3:10). மனுகுலத்தின் ஒரு அங்கத்தினரிடமிருந்து தேவன் மன ரீதியாகவோ, ஒழுக்க ரீதியாகவோ, சரீர ரீதியாகவோ பூரணத்துவத்தை எதிர்பார்க்கவில்லையென்றால், எந்த பண்பு தேவனிடமிருந்து விசேஷித்த பாராட்டுதலை பெற்றுக் கொள்ளச் செய்யுமென்று கேள்வி எழும்பு கிறது. மூப்பரான பாத்திரவான்களின் சரித்திரங்களில் காணப்படுகிற சாட்சிகளுக்கு இணக்கமாக நாங்கள் இவ்வாறு பதிலளிக்கிறோம்: "ஆவியோடும் உண்மை யோடும்" அதாவது உண்மைத்துவத்துடனும் நேர்மை யுடனும் தேவனைத் தொழுது கொள்கிறவர்களை அவர் விரும்புகிறார். விசுவாசமென்பது தொழுது கொள்ளு தலின் அடிப்படையாக இல்லாவிட்டால், இவ்வாறு தொழுது கொள்வது கூடாத காரியமாகும், ஏனென்றால் எழுதப்பட்டிருக்கிறதின்படி, "தேவனிடத்தில் சேருகிற வன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர் களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் … விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமா யிருப்பது கூடாதகாரியம்" (எபி. 11:6).






2. அன்பே பிரதானமானதென்று அப்போஸ்தலர் எழுதுகிறார் என்பது உண்மை. ஆனால் அப்போஸ்தலர் இதை விசுவாசத்தினால் ஏற்கனவே தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களுக்கு எழுதுகிறார். வேறொரு கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது விசுவாசமே பிரதானமானதாகும். ஏனென்றால் இந்த காலத்தில் தேவனுடைய மற்றெல்லா தயவுகளையும் பெற்றுக் கொள்வதற்கு விசுவாசமே அடிப்படையாகவும், ஒரே நிபந்தனையாகவும் இருக்கிறது. ஆபிரகாம் என்ன செய்தார்? அவர் செய்த பெரிய வீரச்செயல்கள் என்ன? அவரைக் குறித்து என்ன எழுதப்பட்டிருக்கிறது? "வேத வாக்கியம் என்ன சொல்லுகிறது? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப் பட்டது" (ரோம.4:3). இவ்வசனத்தின்படி, விசுவாசமென்பது அநேக குறைபாடுகளை மூடும். தேவ வார்த்தையின்படி, நாம் நம்முடைய மீட்பரிடத்தில் விசுவாசத்தை அப்பியாசிப்பதின் மூலம் மட்டுமே நீதியின் வஸ்திரத்தால் மூடப்பட்டவர்களாகக் கருதப்பட்டு, பிதாவுக்கு பிரியமானவர்களாக ஆக்கப்பட்டு, மீட்பருக்குள் பூரணப்படுத்தப்பட்டவர்களாக நிற்க அனுமதிக்கப்படுவோம்.

3. ஈசாக்கை கர்த்தருடைய ஜனங்களில் ஒருவராகக் கருதுவதற்கு அவருடைய வாழ்க்கையில் என்ன விசேஷமான அனுபவங்கள் இருந்தன? ஈசாக்கு எந்த ஒரு பெரிய காரியத்தையோ, அதிசயத்தையோ செய்யவில்லை. அவர் எந்த கல்லூரியையும் ஸ்தாபித்ததில்லை, எந்த ஆலயத்தையும் கட்டினதில்லை, இடர் காப்புதவிகளை ஏற்பாடு செய்ததில்லை. இவைகள் பாராட்டதக்கக் காரியங்களாக இருந்தாலும், இவைகளினால் ஈசாக்கு தேவனால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மாறாக அவரும் தேவனை விசுவாசித்ததினால் தேவனுடைய அங்கீகாரத்தைப் பெற்றிருந்தார்.

4. யாக்கோபுக்குத் தேவனுடைய ஜனங்களின் சரித்திரத்தில் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இடம் அளிக்கப்பட்டு, இஸ்ரயேல் தேசத்தின் தகப்பனாக இருக்கும் தகுதி அளிக்கப்படுவதற்கு அவர் என்ன அதிசயமான காரியங்களை செய்தார்? யாக்கோபு தேவனிடத்தில் அதிசயமான விசுவாசத்தை அப்பியாசித்தார் என்ற உண்மையைத் தவிர, அவர் ஏதேனுமொரு அதிசயமான வேலையைச் செய்ததாக வேதாகமத்தில் எந்த பதிவும் இல்லை. அவருடைய முற்பிதாவாகிய ஆபிரகாமுக்குச் செய்யப்பட்ட ஆணையினால் கட்டப்பட்ட உடன்படிக்கையில் அவர் விசுவாசம் வைத்தார் - அது அவருடைய வாழ்க்கை முழுவதையும் முற்றிலுமாக நிரப்பினது. ஆரம்பம் முதல் இறுதிவரை அவருடைய வாழ்க்கை முழுவதும் அந்த விசுவாசத்திற்கு இணக்கமாக அமைக்கப்பட்டிருந்தது. தேவன் அவருடைய விசுவாசத்தையும் அவருக்கு நீதியாக எண்ணினார். ஆகையால் மற்றவர்களுடன் அவருடைய நாமமும் தேவனுக்குப் பிரியமானவர்களென்று மேன்மையான சாட்சியைப் பெற்றவர்களில் ஒன்றாக இந்நாள்வரை கருதப்படுகிறது. இவர்கள் இறுதியாகத் தேவனுடைய உன்னதமான வேலையில் பங்கு கொள்ளும் சிலாக்கியத்தை ஒரு வெகுமதியாகப் பெற்றுக் கொள்வார்கள்.

5. உலகத்தில் பெரிய மற்றும் உபயோகமான வேலையைச் செய்வதைப் பொருத்தவரைத் தம்முடைய முன்னோர்களை விட யோசேப்பு அதிகமான காரியங்களைச் செய்தார்: தேவனுடைய பரிபாலனங்களுக்கு இணக்கமாக யோசேப்பு தன்னுடைய தகப்பனின் வீடாகிய இஸ்ரயேல் தேசத்தை மட்டுமல்ல, எகிப்து தேசத்தையும் பஞ்சத்திலிருந்து காப்பாற்றினார். இல்லாவிட்டால் அந்த பஞ்சம் அவர்கள் அனைவரையும் அழித்திருக்கும். ஆனால் வேதாகமத்தில் யோசேப்பு இந்த பெரிய செயலின் நிமித்தம் விசேஷமாக நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. மாறாக வேதாகமமானது யோசேப்பின் வாழ்க்கையில் நடந்த சிறிய சம்பவங்கள் சிலவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அவருடைய காரியங்கள் எல்லாவற்றையும் தேவனிடத்தில் அவர் வைத்த விசுவாசத்தின் சான்றுகளாக அறிவிக்கிறது. விசுவாசமில்லாதிருந்தால் யோசேப்புக்கு எவ்வித முக்கியத்துவமும் இல்லாதிருந்திருக்கும். மிக சோதனையான சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகளின் மத்தியிலும் கூட அவரைத் திடன் கொள்ளச் செய்து, இருதயத்தில் அமைதியுள்ளவராக இருக்க செய்த காரியம் அவருடைய விசுவாசமேயாகும். அவர் எவரிடம் விசுவாசம் வைத்தாரோ அவரிடம் வெளிப்படுத்தின விசுவாச உண்மைத்துவம் மற்றும் ராஜ விசுவாசத்தினாலே தான், போத்திபாரின் வீட்டிலிருந்த போது நிகழ்ந்த சோதனையில் காக்கப்பட்டார். அவருடைய விசுவாசத்தினாலே தான் அவர் சிறைச்சாலையில் நடந்த காரியங்களை மேற்கொண்டார். மற்றவர்களுக்கு ஆறுதலளிக்கவும் உதவி செய்யவும் அது அவருக்கு சந்தர்ப்பங்களைக் கொடுத்தது. துயரத்திலுள்ள மற்றவர்களுடன் ஒத்துணர்வு கொள்ள அவருடைய விசுவாசமே அவருக்குக் கற்றுக் கொடுத்தது. தேவனோடு பந்தத்திற்குள் செல்ல அவருடைய விசுவாசம் தான் அவரைத் தூண்டினது. அதினாலே அவர் சொப்பனங்களை விளக்கக் கூடியவராக இருந்தார். அது அவரை அதிகாரமும் செல்வாக்குமுடைய நிலைக்கு உயர்த்தினது. அப்போதும் கூட அவருடைய விசுவாசத்தினாலே தான் அவர் மிதமிஞ்சி செயல்படாமல், தனக்குக் கிடைத்த

சந்தர்ப்பங்களைச் சரியாக உபயோகிக்கும் திராணியை பெற்றுக்கொண்டார். அவர் தெளிந்த புத்தியின் ஆவி உடையவராகவும் நல்ல இருதயமுடையவராகவும் இருப்பதை இது நிரூபித்தது.

*6.* பழைய ஏற்பாட்டிலுள்ள மற்ற அனைவரையும்விட வார்த்தை மற்றும் செயல் இரண்டிலும் வல்லவராயிருந்தவர் மோசே ஆவார். ஒரு தலைவராகவும் நியாயப்பிரமாணிக்கராகவும் அவருடைய மேன்மை பிரகாசமாக வெளிப்பட்டு, அவரை ஒரு அற்புதமான நபராகச் சுட்டிக் காட்டினாலும், அவருடைய சரித்திரத்தில் மிக விசேஷமாகக் குறிப்பிடத்தக்க அம்சம் அவருடைய விசுவாசமேயாகும். அவருடைய காரியத்திலோ மற்றவர்களின் காரியத்திலோ விசுவாசமென்ற இந்த அம்சம் பகட்டாக விசேஷமாகக் காண்பிக்கப்பட்டு, நாம் பாராட்டும்படி விளம்பரப்படுத்தப்படவில்லை. மாறாக உறுதியான நம்பிக்கையைத் தூண்டும் எளிமையான விதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய விசுவாசத்தைக் குறித்து வார்த்தைகளில் சொல்லப்படாமலே, அதின் செயல்பாட்டை நாம் காண்கிறோம். கர்த்தரில்லாமல் மோசே ஒன்றுமில்லாதவராக இருந்திருப்பார். கர்த்தர் அவரோடிருந்தும், மோசே விசுவாசமுள்ளவராக இல்லாதிருந்தால், அவர் எதையும் நிறைவேற்றியிருக்க மாட்டார். ஏனென்றால் தேவன் அவரை உபயோகித்திருக்க மாட்டார். தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்காகத் தேவன் மற்றொருவரைக் கண்டு கொண்டிருப்பார். தேவன், மோசே, மோசேயின் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் - இவைகளெல்லாம் இணைந்து செயல்பட்டு, நாம் அவருடைய வாழ்க்கையில் காண்கிற மாட்சிமையான காரியங்களைத் தூண்டி இருக்கின்றன. அதினாலே அவர் முழு உலகத்தின் பார்வையில், சரித்திரத்தின் மிக பெரியவர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். மோசே எவ்வளவு பெரியவராக இருந்தாரென்றால், “உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல் ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்” என்று எளிமையாகவும் பகட்டில்லாமலும் சொல்லக் கூடியவராக இருந்தார். அவ்வாறு சொல்லும்போது அவர் சுவிசேஷ யுகத்தில் தேவன் எழும்ப பண்ணின தலையும் சரீரமுமாகிய மா உன்னத மேசியாவைக் குறிப்பிடுகிறார்.

*7.* நாம் தேவனுடைய தயவையும், அங்கீகாரத்தையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ள விரும்பினால், முதலாவதாக நாம் தேவனிடத்தில் முழுமையான விசுவாசம் வைப்பதே நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான காரியமாகுமென்று, இந்த உண்மைகளெல்லாம் நமக்குப் போதிக்கின்றன. மேலும் இந்த விசுவாசமானது அபிவிருத்தியின், வளர்ச்சியின் ஒரு காரியமாக இருக்கிறதென்று நாம் வேதாகமத்திலிருந்தும் அனுபவத்திலிருந்தும் காண்கிறோம். நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு வருடமும் செல்ல செல்ல நம்முடைய விசுவாசம் தொடர்ந்து பலப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்வதின் மூலம் நம்முடைய வாழ்க்கையின் இறுதி நாட்கள் விசுவாச உறுதி நிறைந்தவைகளாக இருக்க வேண்டும்.

*8.* ஆனால் விசுவாசத்தை வளர்த்துக் கொள்ள நாடுபவர்களுக்கு நேரிடுகிற ஒரு அபாயத்தையும் கடினமான காரியத்தையும் நாம் இங்கே கவனிக்க வேண்டும். தேவனிடத்திலும் அவருடைய வார்த்தையிலும் விசுவாசம் வைப்பதற்குப் பதிலாக, மனுஷனிடத்திலும், மனுஷருடைய வார்த்தைகளிலும், மனுஷருடைய கோட்பாடுகளிலும் விசுவாசம் வைக்கும்படி எதிராளியானவன் அவைகளை நமக்கு முன் வைப்பான். தவறான காரியங்களில் வைக்கிற விசுவாசத்தினால் தடைப்பட்டுச் சரியான பாதையிலிருந்து விலகி போன எத்தனை பேர்களை நாம் இன்றைக்கும் காண்கிறோம்! இன்றைக்கும் எத்தனை பேர்கள் தேவ வார்த்தையை அசட்டை செய்து, மதப்பிரிவு கொள்கைகளையும் மனுஷ கோட்பாடுகளையும் தொழுது கொள்கிறார்கள்! ஆகையால், தேவனுடைய ஜனங்களின் மத்தியில் அவருடைய வாயாகவும் வழிக்காட்டிகளாகவும் இருக்க தேவன் எப்போதுமே மனுஷர்களை உபயோகித்திருக்கிறார் என்ற உண்மையை நாம் அங்கீகரிக்கும் அதே நேரத்தில், பின்வரும் உண்மைகளையும் அங்கீகரிப்பது மிகவும் அவசியமானதாகும்: *(1)* சாத்தானும்கூட அவனுடைய வாயாகச் செயல்பட பலரைத் தெரிந்து கொண்டு, பல தலைவர்களை உருவாக்குவான், *(2)* “இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற் காலத்து வெளிச்சமில்லை” *(ஏசா. 8:20)* என்று எழுதப்பட்டிருப்பதற்கு இணக்கமாக, நாம் உண்மையான மற்றும் கள்ள போதகர்களுக்கிடையில் வித்தியாசம் காண்பதற்கு, தேவ வார்த்தைக்கு அவர்கள் வெளிப்படுத்தும் விசுவாச உண்மைத்துவத்தை கருத்தில் கொள்ள வேண்டும்.

*9.* ஆகையால் நாம் விசுவாசத்தை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானம் செய்து கொள்வது மட்டுமல்ல, அந்த விசுவாசத்தின் அஸ்திபாரம் தேவனுடைய வார்த்தையாக இருக்கிறதென்பதையும் நிச்சயித்துக் கொள்வோமாக. இவ்வாறு நிச்சயித்துக் கொள்வதென்பது சத்தியத்தின்மேல் எந்த அளவான அன்பையும், தேவ வார்த்தையின் மேல் எந்த அளவான மதித்துணருதலையும் அர்த்தப்படுத்துமென்றால், சத்தியத்தை அறிந்து கொள்வதற்காகவும் அதன்மூலம் விடுதலை அடைவதற்காகவும், நம்முடைய நேரத்தையும், சக்தியையும், பணத்தையும் நமக்குரிய சகலத்தையும் செலவழிக்க நம்மை வழி நடத்தும் அளவிற்காகும். ஆகையால் தேவனிடத்திலோ அல்லது தேவ வார்த்தையிலோ அன்பு கூருவதைவிட அதிகமாகப் பணத்தையோ மனுஷருடைய பாராட்டுதலையோ கனத்தையோ நேசித்தால், அவர்கள் தேவனைப் பற்றிய சரியான அறிவை பெற்றுக் கொள்ளவோ தக்க வைத்துக் கொள்ளவோ கூடாததாக இருக்கும். சரியான அறிவின்மேல் மட்டுமே சரியான விசுவாசமும் கீழ்ப்படிதலும் கட்டப்படக் கூடும்.

## நல்லொழுக்க பயிற்சியின் பாடசாலையிலிருக்கிறோம்

*10.* ஆபிரகாம் தன்னுடைய சுயதேசத்தை விட்டு விட்டு, தெய்வீக வாக்குத்தத்தத்தினாலேயன்றி வேறெந்த விதத்திலும் அதுவரை அவருக்கு எந்த உரிமையும் இல்லாத மற்றொரு தேசத்திற்குச் செல்ல கர்த்தர் அவருக்குக் கொடுத்த அழைப்பைப் பின்பற்ற தயாராக இருப்பது ஆரம்ப நிலை விசுவாசமாக மட்டுமே இருந்தது. இது மட்டுமே போதாது. ஆனால் ஆபிரகாம் இந்த அளவு விசுவாசமுடையவராக இருந்து, அதை அப்பியாசிக்கக் கூடியவராக இருந்ததினால்தான் வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொள்ளவே பாத்திரராகத் தேவன் அவரைக் கருதினார். அதற்குப் பிறகு தான் அவர் அந்த வாக்குத்தத்தங்களை எவ்வளவு உறுதியாகப் பற்றிக் கொள்வார் என்பது சம்பந்தமாக பரீட்சிக்கப்பட்டார்.

எடுத்துக்காட்டாகத் தெய்வீக வாக்குத்தத்தங்கள் எல்லா வற்றின் மையமாக இருந்த, அவருடைய குமாரனின் பிறப்பு சம்பந்தமாகப் பரீட்சிக்கப்பட்டார். இதன் சம்பந்தமாக ஆபிரகாமின் விசுவாசத்தை இருபத்தைந்து வருட காலத்திற்குப் பரீட்சித்தார். அதற்குள் ஆபிரகாம் முதிர் வயதுள்ளவரானார். அவர் நூறு வயதுள்ளவராக இருக்கும்போது ஈசாக்குப் பிறந்தார். அதற்குப் பிறகும் கூட தேவன் ஆபிரகாமின் விசுவாசத்தைத் தொடர்ந்து பரீட்சித்துக் கொண்டு, நல்லொழுக்க பாடசாலையில் அவரைத் தொடர்ந்து வைத்திருந்தார் என்பதையும் கவனிப்போமாக. அவருடைய விசுவாசத்தைத் தகர்ப்ப தற்காகவோ, அழிப்பதற்காகவோ தேவன் அதைப் பரீட்சியாமல், அவருடைய விசுவாசத்தை வர்த்திக்க பண்ணுவதற்காகவும், அதைப் பலப்படுத்துவதற்காகவும், எல்லா விதத்திலும் அதை மேம்படுத்துவதற்காகவும் தேவையான பரீட்சைகளை அவருக்குக் கொடுத்தார். எடுத்துக்காட்டாக, ஈசாக்கு ஒரு வாலிபனாக வளருமள விற்கும், மற்றொரு குமாரனை ஆபிரகாம் பெற்றெடுக்க நம்பிக்கை கொள்ளக் கூடிய ஆயுள் நாட்களின் பகுதியைக் கடந்து செல்லுமளவிற்கும் காலம் செல்ல அனுமதித்த பிறகு, ஈசாக்கைப் பலி செய்ய தேவன் கட்டளையிட்டார். அப்போதும்கூட தடுமாறாத அந்த விசுவாசம், தன்னு டைய வித்துக்குள் பூமியின் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக் கப்படும் என்று அப்போதும் உறுதியாக நம்பின அந்த விசுவாசம் என்னே மாட்சிமையானது! தெய்வீக போதனையின்கீழ் கொடுக்கப்பட்ட பல்வேறு பாடங் களினால் ஆபிரகாம் எவ்வளவு சிறப்பாகக் கற்பிக்கப் பட்டிருந்தார் என்பதற்கும், அவர் அவைகளை எவ்வளவு சிறப்பாகக் கற்றுக் கொண்டார் என்பதற்கும் இங்கே நமக்கு என்னே ஒரு சாட்சி அளிக்கப்பட்டிருக்கிறது! மரித்தோரிலிருந்து ஈசாக்கை எழுப்பவும், அதின் மூலம் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றவும் தேவன் வல்லவரா யிருந்தார் என்று ஆபிரகாம் நிதானித்து, அவருடைய குமாரனைப் பலி செய்ய திராணியுடையவரானார் – அவர் ஒருபோதும் சந்தேகப்படவில்லை. ஆஹா அதினால் என்னே மாட்சிமையான உச்ச நிலையான விசுவாசத் திற்குச் சான்று அளிக்கப்பட்டது! இவ்வித ஒரு குணாம்சத்தைக் கண்டு தேவன் என்னே மகிழ்ந்திருப்பார்! அதுவும் ஆபிரகாம் காலத்திலிருந்த இருளையும் விக்கிரகாராதனையையும் கருத்தில் கொள்ளும் போது அவருடைய விசுவாசம் இன்னும் அதிக பொலிவுடன் பிரகாசிக்கிறது.

*11.* ஈசாக்கு மற்றும் யாக்கோபும் கூட எவ்வாறு முன்னமே கற்பிக்கப்பட்டு, தேவனிடத்திலும் அவரு டைய ஆணையினால் கட்டப்பட்ட உடன்படிக்கையிலும் தைரிய உறுதியை வைக்க வேண்டுமென்ற பாடத்தை நன்றாகக் கற்றுக் கொண்டார்கள் என்பதையும் சிந்தித்துப் பார்ப்போமாக. யோசேப்பின் காரியத்திலும் நாம் இதையே காண்கிறோம். அவருடைய வாழ்க்கை உபத்திரவங்கள் நிறைந்த ஒன்றாக இருந்தது. இந்த சோதனையான அனுபவங்களினால் அவருடைய வாழ்க்கை ஒரு முழுமையான விதத்தில் வடிவமைக்கப் பட்டிருந்தது. வாழ்க்கை என்னும் பிரயாணத்தில் ஒவ் வொரு படியிலும் அவருடைய விசுவாசம் அதிக உறுதியடைந்து, வெளிப்படையாகவும் காணப்பட்டது. மோசேயின் வாழ்க்கையிலும் ஆரம்பம் முதல் இறுதிவரை இதையே நாம் காண்கிறோம். அவர் தன்னுடைய சொந்த திறமைகள் சம்பந்தமாக எவ்வளவு மனத்தாழ்மையுள்ள வராக இருந்தாரெனில், ஜனங்களின் வழிக்காட்டியாக இருக்க தான் மிகவும் அபாத்திரரென்று வற்புறுத்தி கூறும் அளவிற்காகும். ஆனால் தேவன் அவரை வழி நடத்து வாரென்றும், தம்முடைய பிரதிநிதியாகவும் செயலியக்கி யாகவும் மட்டுமே தேவன் அவரை உபயோகிப்பா ரென்றும் நிச்சயத்தைப் பெற்ற பிறகு, மோசே முழு மனதுடன் முன்வந்தார். மேலும் சர்வ வல்லமையுள்ள தேவனிடத்தில் அவருக்கிருந்த விசுவாசத்தின் மூலம் சகலத்தையும் நிறைவேற்ற விருப்பமுள்ளவராகவும், ஆயத்தமுள்ளவராகவும், திராணியுடையவராகவுமிருந் தார். இதிலிருந்து நாம் பின்வரும் பாடத்தைத் தெளி வாகக் காண்கிறோம்: *(1)* மூப்பரான பாத்திரவான்களுக்கு வந்த சோதனைகள், கஷ்டங்கள், விசுவாசத்தின் பரீட்சைகள் மற்றும் நல்லொழுக்க பயிற்சிகளெல்லாம் விசுவாசம் சம்பந்தமாக அவர்களுடைய குணாம்சத்தை அபிவிருத்தி செய்து கொள்வதற்காகக் கர்த்தரால் விசேஷமாக ஏற்பாடு செய்யப்பட்டவைகளாக இருந்தன; *(2)* தொடக்கத்திலேயே விசுவாசம் அவர்களுடைய குணாம்சத்தின் சிறப்பியல்பாக இருப்பது மட்டுமல்ல, இந்த சிறப்பியல்பு அவர்கள் ஒவ்வொருவரிலும் இன்னும் அதிகமதிகமாகக் குறிப்பிடத்தக்க ஒன்றாக ஆகும்படிக்குத் தேவன் அவர்களை வழி நடத்தினார்.

*12.* பண்டைய காலத்தின் இந்த மேன்மையான நபர்கள், தெய்வீக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண் டார்கள் என்றும், அவர்களுடைய சோதனையிலும் பரீட்சையிலும் வெற்றியடைந்து, உயிர்த்தெழுதலில் ஒரு மேன்மையான வெகுமதியைப் பெற்றுக் கொள்வதற் காகக் காத்திருப்பவர்களாக மரணமென்னும் நித்திரைக் குள் சென்றிருக்கிறார்கள் என்றும் அப்போஸ்தலர் கொடுக்கிற சாட்சியைக் கண்டு நாம் மகிழ்கிறோம். அவ்வாறு சாட்சி கூறும் அதே நேரத்தில், தேவனுடைய திட்டத்தில் சுவிசேஷ யுகத்தின் "சிறுமந்தை" மூப்பரான பாத்திரவான்களை விட இன்னும் உயர்வான நிலைக்கும், சிலாக்கியத்திற்கும், ஆசீர்வாதத்திற்கும் அழைக்கப்பட் டிருந்தார்கள் என்றும் அப்போஸ்தலர் நமக்குச் சொல்கிறார். "இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல் ... விசுவாசத் தோடே மரித்தார்கள்". "அவர்கள் நம்மையல்லாமல் (சுவிசேஷ யுக சபை) பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்ன தாக நியமித்திருந்தார்.". மூப்பரான பாத்திரவான்கள் மனு ஷீக தன்மையில் பூரண நிலையை அடைவார்கள். முற்றிலும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களான சிறு மந்தை எல்லா தேவ தூதர்களுக்கும், துரைத்தனங் களுக்கும், அதிகாரங்களுக்கும் மேலாக தெய்வீக தன்மை யில் பூரண நிலையை அடைவார்கள். சுவிசேஷ யுக சபை வகுப்பாரைத் தேவன் அங்கீகரிப்பது சம்பந்தமாகவும், அவர்களுக்குத் தேவன் கொடுத்த பரீட்சைகள் சம்பந்த மாகவும் நாம் என்ன சொல்லுவோம்? மூப்பரான பாத்திரவான்களின் விசுவாசத்தைப் பரீட்சித்த தேவன், சுவிசேஷ யுக தெரிந்து கொள்ளுதல் சம்பந்தமாக அதைக் கருத்தில் கொள்ளாதிருப்பாரென்று நாம் நினைக்கக் கூடுமா? நிச்சயமாக இல்லை.

*13.* இன்றைக்கும் தேவனுக்குப் பிரியமானவர் களாக இருக்க விரும்புகிற அனைவரிலும் சோதிக்கப் படுகிற காரியம் விசுவாசமே ஆகும். கடந்த காலத்தில் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மற்றும் ஆசீர்வாதங் களின் வழிகளாக இருக்கும்படிக்கு அவர் விசுவாசத்தை அப்பியாசிக்கக் கூடியவர்களை மட்டுமே தெரிந்து கொண்டதைப் போலவே, இக்காலத்திலும் தேவனிடத் திலும் அவருடைய வாக்குத்தத்தங்களிலும் விசுவாசத்தை அப்பியாசிக்கக் கூடியவர்களைத் தவிர மற்றவர்களுக்குக்

கர்த்தர் எதையும் அளிப்பதில்லை. இந்த விசுவாச யுகத்தில் அழைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை உலகத்தில் உள்ளவர்களின் முழு எண்ணிக்கையைவிட மிகவும் குறைவாக இருக்க வேண்டுமென்று நாம் அறிகிறோம். இவ்வாறு அழைக்கப்பட்டவர்களிலும் கூட சிலர் மட்டுமே தெரிந்து கொள்ளப்படுவார்களென்று நாம் அறிகிறோம். தேவனுக்குப் பிரியமானவர்களாக இருப்பதற்கும், அவருடைய அன்பின் குமாரரும்,நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய யெஷூஆ கிறிஸ்துவின் ராஜ்யத்தில் ஊழியஞ் செய்யத் தகுதியுள்ளவர்களாக இருப்பதற்கும் தேவையான விசுவாசமும் கீழ்ப்படிதலுமுள்ளவர்களாக நிரூபிக்கப்படுகிறவர்கள் சிலராக மட்டுமே இருப்பார்களென்று இது அர்த்தப்படுத்துகிறது.

*14.* இந்த விசுவாச யுகம் முழுவதும் விசுவாசமுள்ளவர்கள் மட்டுமே அழைக்கப்பட்டிருக்கும் போது, அவர்களுக்களிக்கப்படும் விசுவாச பரீட்சைகளைக் குறித்து நாம் என்ன சொல்லக் கூடும்? அவர்களுடைய விசுவாசம் பெரிதாகப் பரீட்சிக்கப்படுவது அவசியமென்று அப்போஸ்தலர் தெரிவிக்கிறார். "பொன்னைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்படும்" *(1பேது. 1:7)* என்று அவர் சொல்கிறார். இக்காலத்தில் பொன் மிகவும் அரிதான உலோகமாக இருப்பதால், விசேஷித்த மதிப்பு வாய்ந்ததாயிருக்கிறது. ஆனால் காரியங்களின் புதிய அமைப்பில் பொன்னைப் பெற்றுக் கொள்வது களிமண்ணையோ இரும்பையோ பெற்றுக் கொள்வதைப் போல் எளிதாக இருக்கும் போது, பொன்னின் மதிப்பு குறையும். ஆனால் இக்காலத்தில் தேவன் தெரிந்து கொள்கிற பிரதிஷ்டையாளர்கள் எப்போதுமே விசேஷித்த மதிப்புள்ளவர்களாக இருப்பார்கள். அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் விசேஷித்த ஒரு இடத்தை பெற்றுக் கொள்வார்கள். ஆகையால் பிரதிஷ்டை செய்த வகுப்பாரின் விசுவாச பரீட்சை மிகவும் விலையேறப் பெற்ற ஒன்றாக இருக்கிறது. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காரியமாக இருக்கிறது. எந்த ஒருவனும் முதலில் கர்த்தரால் பரீட்சிக்கப்பட்டு நிரூபிக்கப்படாமல், அந்த ராஜ்யத்தில் ஊழியக்காரனாக இருக்கும் மேன்மையான நிலையை அடைய அனுமதிக்கப்படுவதில்லை.

*15.* ஆனால் இதிலும்கூட நாம் நம்முடைய மாம்சத்தில் பூரணர்களாக இருக்கிறோமா இல்லையா என்று காண்பதற்கு, நம்முடைய மாம்சம் சம்பந்தப்பட்ட காரியங்களில் நாம் சோதிக்கப்படுவதில்லை என்று நினைவு கூருவோமாக. இதற்கு மாறாக தேவன் நம்முடைய நிலையை அறிவாரென்றும், அவருடைய பார்வைக்கு முன்பாக எல்லா காரியங்களும் வெளிப்படையாகவும் ஒளிவு மறைவற்றவைகளாகவும் இருக்கின்றனவென்றும், நாம் எல்லோரும் அபூரணர்களென்று அவர் தாமே அறிவிக்கிறாரென்றும் நமக்கு உறுதியளிக்கப்படுகிறது. அப்படியானால் தேவன் நம்மில் எதைத் தேடுகிறார்? விசுவாசத்தின் அபிவிருத்தியையும் பூரணத்துவத்தையுமே அவர் தேடுகிறார்! அதில் அடங்கியுள்ள முதல் காரியமானது, அவர் உண்மைத்துவமுள்ள, ஞானமான, உண்மையான தேவன் என்று நாம் அவரிடத்தில் விசுவாசம் வைப்பதென்பதாகும். இரண்டாவதாகக் கர்த்தராகிய யெஷூஆ தேவனுடைய குமாரரென்றும், நம்முடைய கடந்த கால, நிகழ்கால மற்றும் வருங்கால அபூரணங்களையும், கறைகளையும் மூடுவதற்குத் தேவன் யெஷூஆவின் மூலம் ஏற்பாடு செய்திருக்கிறார் என்றும் யெஷூஆவைக் குறித்துத் தேவன் கொடுத்த வெளிப்பாட்டை விசுவாசிக்க வேண்டும். இதைத் தொடர்ந்து பற்றிக் கொண்டிருப்பது விசுவாசத்திற்கு இன்றியமையாத ஒரு காரியமாகும். ஆகையால் நம்முடைய ராஜ விசுவாசத்தை நிரூபிப்பதற்கு இது சம்பந்தமாக அவர் நம்மை பரீட்சிப்பார்.

*16.* நம்முடைய வாழ்க்கையில் நாட்களும், மாதங்களும், வருடங்களும் செல்ல செல்ல இந்த விசுவாசம் தான் அதிகமதிகமாகப் பலப்பட வேண்டும். இந்த விசுவாசத்தின் மூலம் தான் கிறிஸ்துவின் ஒப்புரவாகுதலின் புண்ணியம் நம்முடைய கணக்கில் எழுதப்படும். இந்த விசுவாசத்தின் மூலம் தான் நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்படுவோம்.இந்த விசுவாசம் தான், கர்த்தரைக் கண்டு கொள்ளக் கூடாத போதிலும் அவரிடத்தில் தைரிய உறுதி வைக்கும் அளவிற்கு விடாமுயற்சியும் பலமுமுள்ள விசுவாசமாக நிரூபிக்கப்பட வேண்டும். ஆபிரகாம் இதைச் செய்தார். தேவன் அவர் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதென்பது ஈசாக்கை மரித்தோரிலிருந்து எழுப்புவதை அர்த்தப்படுத்தினாலும் கூட அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற தேவன் வல்லவராகவும் விருப்பமுள்ளவராகவும் இருந்தாரென்றும் ஆபிரகாம் விசுவாசித்தார்.

*17.* நாமும் இவ்விதமான விசுவாசத்தைக் கற்றுக் கொண்டு, அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும். தேவனையும் அவருடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலையும் உறுதியாக நம்பும் அளவிற்கு நாம் இந்த விசுவாசத்தை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும். அவருடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதல் என்பது மரித்தோரிலிருந்து நாம் உயிர்த்தெழுவது மட்டுமல்ல, கல்லறை என்னும் சிறைச்சாலையிலிருந்து பூமியின் சகல ஜாதியாரும் எழுப்பப்படுவதை அர்த்தப்படுத்தினாலும் அந்த வாக்குத்தத்தங்கள் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். "உன் வித்துக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்று தேவன் ஆபிரகாமுக்குச் செய்த கிருபையான வாக்குத்தத்தம் எல்லா ஜாதியாருக்கும் நிறைவேற்றப்படும் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். தேவனிடத்திலும் அவருடைய வாக்குத்தத்தங்களிலும் இவ்வித விசுவாசமில்லாமல் அவருக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். மேலும் இக்காலத்தில் அவர் மனுகுலத்திலிருந்து ஒரு வித கருத்தில் தெரிந்து கொள்கிற வகுப்பாரைச் சேர்ந்தவர்களாக இருப்பதும் கூடாத காரியம்.

*18.* மேலும் நம்முடைய விசுவாசத்தின் பரீட்சைகளை நாமே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டுமென்று கவலைப்பட அவசியமில்லை. மாறாக இந்த முழு காரியத்தையும் நாம் கர்த்தருடைய கரத்தில் ஒப்புவிக்க வேண்டும். அநேகமாக இந்த பரீட்சைகள் நாம் எதிர்பார்க்கும் விதத்தில் நமக்கு வருவதில்லை. மாறாக நாம் முற்றிலும் எதிர்பாராத இடங்களிலிருந்து இவ்வித பரீட்சைகள் வரக் கூடும். நாம் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கிற தீங்கு நாளில் நமக்கு இவ்விதமான பல சோதனைகள் இருக்குமென்று அப்போஸ்தலர் உறுதியளிக்கிறார். இக்காலத்தில் நம்முடைய விசுவாசத்தின் மேல் செய்யப்படும் தாக்குதல்களை எதிர்கொள்வதற்குத் தேவனுடைய சர்வாயுதவர்க்கம் தேவையாயிருக்கும் என்று அவர் நமக்குச் சொல்கிறார். இந்த தாக்குதல்கள் எவ்வளவு தந்திரமாக இருக்குமென்றால், அவைகள் "முற்றிலும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் கூட வஞ்சிக்கக் கூடுமென்று நம்முடைய மீட்பர்தாமே நமக்குச் சொல்கிறார்.

*19.* ஆனால் தேவனுக்கு உண்மையாகப் பிரதிஷ்டை செய்தவர்கள் வஞ்சிக்கப்பட அவர்

அனுமதிக்கமாட்டார். இதற்காகத் தேவனுக்கு நன்றி கூறுவோம். கர்த்தரே அவர்களுக்கு அடைக்கலமும் தாபரமுமாயிருப்பார். அவர்களுடைய காரியங்களைக் கண்காணிக்கும் பொறுப்பைக் கர்த்தர் தாமே ஏற்றுக் கொள்கிறார். அவர்கள் திராணிக்கு மேலாகச் சோதிக்கப் படுகிறதற்கு அவர் இடங் கொடாமல், சோதனையோடு கூட அதற்குத் தப்பிக் கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார் *(1 கொரி. 10:13)*. இந்த அக்கினி மயமான சோதனைகளைக் குறித்து ஏதோ புதுமை என்று நாம் திகையாமலிருக்க வேண்டும். அதே நேரத்தில் அவை களை எதிர்கொள்ள நம்மை நாமே ஆயத்தப்படுத்திக் கொள்வதற்கு அவைகள் சம்பந்தமாகக் கர்த்தர் கொடுத்த சாட்சியில் நாம் வைக்கும் விசுவாசம் மிகவும் முக்கிய மானதாகும். நாம் அவருடைய வார்த்தையை விசுவாசிக் கிறவர்களாக இருந்தால், தலைச்சீரா, மார்க்கவசம், பாத ரட்சைகள் ஆகியவைகளைத் தரித்துக் கொள்வதற்கும், தேவ வார்த்தையாகிய ஆவியின் பட்டயத்தை உபயோ கிக்கக் கற்றுக் கொள்வதற்கும், அவிசுவாசத்தின் அக்கினி யாஸ்திரங்களை அவித்துப் போடுவதற்குத் தேவையான விசுவாசமென்னும் கேடகத்தை உபயோகிக்க கற்றுக் கொள்வதற்கும் நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் மேம்படுத்திக் கொள்ளுவோம். தேவ வார்த்தைக்குச் செவி சாய்க்காமல், தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை இவ்வாறு தரித்துக் கொள்ளாதவன், சேனைத் தலைவரின் வார்த்தையில் விசுவாசமில்லாத வனாகவும், நம்பிக்கையில்லாதவனாகவும் அதற்குக் கீழ்ப் படியாதவனாகவும் இருப்பதை வெளிப்படுத்துகிறான்.

*20.* ஒவ்வொருவனுடைய வேலைப்பாடு எத் தன்மையுள்ளதென்று நிரூபிக்கப்படுவதற்குப் பரீட்சிக் கப்படுமென்று அவர் நமக்கு உறுதியளிக்கிறார். தெய் வீக சத்தியமென்னும் பொன், வெள்ளி மற்றும் விலை யேறப்பெற்ற கற்களால் உருவான விசுவாசம் மட்டுமே இக்காலத்தின் பரீட்சைகளில் நிலைநிற்கும் என்று அவர் நமக்கு உறுதியளிக்கிறார். நம்மில் இவ்வித விசுவாசம் எந்தளவிற்கு அதிகமாக இருக்கிறதோ, அந்தளவிற்கு நாம் தப்பறையான மத போதனைகள் என்னும் மரம் மற்றும் புல்லையும், அதினால் உருவாகுகிற தவறான குணாம்சம் என்னும் வைக்கோலையும் நம்மிடமிருந்து அகற்றுவதற்கு வைராக்கியமாகச் செயல்படுவோம். அவ் வாறு செய்யும் போது மட்டுமே நாம் இந்த தீங்கு நாளில் நிலைநிற்போம். மேலும் கர்த்தருக்கு உண்மைத்துவ முள்ளவர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவருடைய உதவியைப் பெற்றுக் கொள்வதற்குப் பாத்திரராக எண்ணப்படுவோம். நம்முடைய விசுவாசத்தின் படியே நமக்கு ஆகும். என்னதான் நேரிடினும் விசுவாசம் தேவனை உறுதியாக நம்பும். அது நமக்கு இளைப் பாறுதலைத் தரும்.

*21.* ஏசா. 43:2-ம் வசனம் நமக்கு மிகவும் உற்சாகம் அளிக்கக் கூடிய ஒன்றாக இருக்கிறது. தேவ னால் அழைக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்டு விசு வாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருக்கிற அனை வரும், அவர்கள் முடிவாகத் தேவனுடைய அங்கீகாரத் தைப் பெற்றுக் கொள்வதற்கு அனுபவம், நல்லொழுக்க பயிற்சி மற்றும் பரீட்சையின் பாடசாலையைக் கடக்க வேண்டியதாக இருப்பதால், நம்முடைய ஒவ்வொரு பிரச்சனையிலும் கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்றும், நம்முடைய பரீட்சைகள், உபத்திரவங்கள், துன்பங்கள், குழப்பங்கள் எல்லாவற்றிலும் அவர் நம்மோடு ஒத்து ணர்வு கொள்கிறார் என்றும், அவருடைய கண்டனமாகத் தோன்றுகிற ஒவ்வொரு பரிபாலனத்திற்கும் பின்னால் அவர் புன்னகை நிறைந்த முகத்தை மறைக்கிறார் என்றும் அறிந்து கொள்வது என்னே உற்சாக மூட்டுவதாக இருக்கிறது. துன்பம், ஏமாற்றம், குழப்பம் மற்றும் உபத்திரவம் என்னும் தண்ணீர்கள் நம்மைச் சூழ்ந் திருக்கும். ஆனால் அந்த நீரோட்டத்தோடே நாம் மிதந்து செல்லக் கூடாது. நல்ல போர் வீரர்களாகத் தீங்கனுபவிக்க வேண்டும். வாழ்க்கை என்னும் நீரோட்டத்தை எதிர்த்துப் போராடுவதற்கு நமக்குப் பலமளிக்கிற ஊற்றை நாம் ஒருபோதும் மறந்து விடக் கூடாது. "நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்". என்னே ஆசீர்வாதமான சிந்தனை! “என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு,” “பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்” *(பிலி. 4:13;2கொரி. 12:9)* என்று அவர் நமக்கு உறுதியளிக்கிறார். ஏசா. 43:2-ம் வசனமானது உபத்திரவ மென்னும் ஆறுகளை அர்த்தப்படுத்துகிறது. ஆனால் நாம் அந்த ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் நம்மேல் புரளுவதில்லை, அவைகள் நம்மை அழித்துப் போடு வதில்லை என்றும் நமக்கு உறுதியளிக்கிறது. மேலும் கர்த்தர் நம்மை பாதுகாப்பாக அக்கரைக்குக் கொண்டு செல்வார் என்றும் நமக்கு உறுதியளிக்கிறது. அக்கரையில் நாம் நித்திய ஜீவனையும், ராஜ்யத்தின் சந்தோஷங் களையும் காண்போம்.


★★★★★★★★★★★★★★★★★★★★

## *சங்கீதம் 90*

***BS# 221, Aug 1954, p.60***

*1.* சங்கீதம் 90 மற்ற காரியங்களுடன் மில்லினிய யுக ஆசீர்வாதங்களைக் குறித்து நமக்குத் தெரிவிக்கிறது. அதின் தலைப்பு, “தேவனுடைய மனிதனாகிய மோசே யின் ஜெபம்” அல்லது பாடல் என்பதாகும். மோசேயின் பாடல் என்பது (வெளி. 15:3) பழைய ஏற்பாட்டின் பிரதான கருத்து பொருளாயிருக்கிறது. ஆட்டுக்குட்டி யானவரின் பாடல் என்பது புதிய ஏற்பாட்டின் பிரதான கருத்து பொருளாயிருக்கிறது. மோசேயின் பாடலென்பது பின்வரும் கருத்துக்களைப் பற்றிய போதனையாகும்: *(1)* ஆதியில் மனுஷனுக்கிருந்த பூரணத்துவம், *(2)* மனுஷ னுடைய வீழ்ச்சி, *(3)* சாபம், *(4)* தீமை அனுமதிக் கப்படுதல், *(5)* இழந்ததைத் திரும்பக் கொடுத்தல். சங்கீதம் *90*-ன் தலைப்பு மோசேயின் பாடலாக இருப்பதால், அதற்கிணக்கமாக இந்த சங்கீதம் இந்த கருத்துக்களை போதிக்க வேண்டும், அது அவ்வாறே அவைகளை போதிக்கிறது.

*2.* சங். 90:1,2 ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர். பர்வ தங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர். *சங்கீதம் 90:1,2* வசனங்களில் தெய்வீக திட்டத்தின் காரண கர்த்தரைக் குறித்து நமக்குச் சொல்லப்படுகிறது. வசனம் *1* இவ்வாறு மொழி பெயர்க்கப்பட வேண்டும்: “ஆண்டவரே, தேவரீர் ஒரு தலைமுறையில், ஒரு குறிப்பிடத்தக்க ஒரு தலைமுறை யில் எங்களுக்கு அடைக்கலமாக இருந்தீர்”*[ O LORD, Thou wast our dwelling place in a generation, even the generation].* இங்கே ஆதாம் மற்றும் ஏவாள் பாவமில்லாத நிலை யிலிருந்த போது அவர்களுக்குள் மனுகுலம் அனுபவித்த ஆதி பூரணத்துவம் குறிப்பிடப்படுகிறது. ஏனென்றால்





பிற்காலத்தில் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியை பெற்றுக் கொண்டு சுவிசேஷ யுக சபை தேவனுக்குள் வாசம் பண்ணும்வரை (கொலோ. *3:3;* யோவா. *17:21; 1* யோவா. *4:13, 16*), சாபத்தின் கீழுள்ள மனுகுலத்தின் எந்த அங்கத்தினருக்கும் தேவன் அடைக்கலமாக இல்லாதிருந்தார் என்பது வெளிப்படையாக இருக்கிறது. வச. *2* தேவனுடைய கடந்த கால மற்றும் வருங்கால நித்தியத்துவத்தைக் காண்பிக்கிறது.

*3.* சங். *90:3,4* நீர் மனுஷரை நிர்த்தூளியாக்கி, மனுபுத்திரரே, திரும்புங்கள் என்கிறீர். உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள்போலவும் இராச்சாமம்போலவும் இருக்கிறது. வச. *3* இந்த சங்கீதத்தின் இரு கருத்து பொருட்களை அறிவிக்கிறது: *(1)* சாபம், அதாவது மனுஷனுடைய பாவத்தின் நிமித்தம் தேவன் அவனை தீமையின் அனுபவத்தின் கீழ் மரணத்திற்கு ஒப்புவிப்பது மற்றும் *(2)* இழந்ததைத் திரும்பக் கொடுத்தல், அதாவது மனுகுலம் மரணத்திலிருந்து திரும்ப வந்து, ஆதியிலிருந்த பாவமற்ற நிலைக்கு முழுமையாகத் திரும்பக் கொண்டு வரப்படுவதைத் தேவன் அறிவிக்கிறார். *4*ம் வசனமானது, மனுஷன் ஆதியிலிருந்த பாவமற்ற நிலைக்குத் திரும்பக் கொண்டு வரப்படும் காலம் *1000* வருட காலமாகிய மில்லினிய யுகமாகும் என்பதைக் குறிப்பிடுகிறது. ஏனென்றால் தேவனுடைய கால அளவின்படி ஒரு நாள் நம்முடைய கால அளவில் *1000* வருடங்களாகும் *(2* பேது. *3:8)*.

*4.* அதற்குப்பிறகு சங். *90 :5 -10* வரையுள்ள வசனங்களில் சாபத்தினால் உண்டான தீமைகளில் முக்கியமான தீமைகள் குறிப்பிடப்படுகின்றன. இந்த தீமைகளை சுருக்கமாக அறிவித்த பிறகு, *11*-ம் வசனத்தில், மோசே, தீமை ஏன் அனுமதிக்கப்பட்டது என்ற கேள்வியைக் கேட்டு, அதற்குப் பதிலையும் அளிக்கிறார். வச. *11*ன் சரியான மொழி பெயர்ப்பு இவ்வாறாக இருக்க வேண்டும்: "உமது கோபத்தின் வல்லமையை அறிந்து கொள்ளுகிறவன் யார்? உமக்குப் பயப்படத்தக்க விதமாய் உமது உக்கிரம் இருக்கிறது". இவ்வசனத்தில் “வல்லமை” என்பது "அர்த்தம்" என்ற பொருளை உடையதாகும். ஏனென்றால் வல்லமை என்ற வார்த்தையானது "அர்த்தம்" என்பதையும் பொருள்படுத்த உபயோகிக்கப்படும். எடுத்துக்காட்டாக ஆங்கில மொழியில் “இந்த வார்த்தையின் வல்லமை என்ன?” என்று சொல்லும் போது, “இவ்வார்த்தையின் அர்த்தமென்ன?” என்பதைக் குறிக்கும். ஆகையால் “உமது கோபத்தின் வல்லமையை அறிந்து கொள்கிறவன் யார்” என்று சொல்லும்போது, அது சாபத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தேவ கோபத்தின் அர்த்தமென்ன என்பதைக் குறிக்கும். “உமக்குப் பயப்படத்தக்க விதமாய் உமது உக்கிரம் இருக்கிறது என்பது”, மனுகுலத்தின்மேல் வந்த தேவனுடைய சாபத்தின் நோக்கமானது, மனுகுலத்தில் தேவன்மேல் போற்றி துதிக்கும் பயபக்தியை உருவாக்குவதாகும் என்பதைக் குறிக்கிறது.

*5.* இவ்வாறாக சங். *90:11*-ன் முதல் வாக்கியத் தொடர், தேவன் தீமையை ஏன் அனுமதித்தார்? என்ற கேள்வியைக் கேட்கிறது: அதின் இரண்டாம் வாக்கிய தொடர் அதற்குப் பதிலளிக்கிறது. அதாவது மனுகுலத்தின்மேல் வந்த சாபம் - தீமையின் அனுபவம் - மனுகுலத்தில் தேவன் மேல் போற்றிதுதிக்கும் பயபக்தியை உருவாக்குவதற்கு இணக்கமாக இருக்கிறது என்பதே அந்த பதிலாகும். அதாவது தீமையின் அனுபவம் மனுகுலத்திற்கு பக்தி நிறைந்த பயத்தை அல்லது போற்றிதுதிக்கும் பயபக்தியை போதிக்கும். இது அவர்களைப் பாவத்தை வெறுக்கவும் தவிர்க்கவும் செய்கிறது.

*6.* சங். *90:12-17* வரையுள்ள வசனங்கள் மில்லினிய யுகத்திற்குரிய வசனங்களாகும். *5-10* வரையுள்ள வசனங்கள் மனுகுலம் அழிவிற்குள் செல்வதை விவரிப்பதைப் போல், *12-17* வரையுள்ள வசனங்கள் மனுகுலம் அழிவிலிருந்து திரும்ப வருவதை விவரிக்கின்றன. வச.*12*-ல், மனுகுலமானது சாபத்தின் "எல்லா" நாட்களையும் (எங்கள் நாட்களெல்லாம் -சங். *90:9,10*), இழந்ததைத் திரும்பக் கொடுத்தல் நடைபெறும் "எல்லா" நாட்களையும் (எங்கள் வாழ்நாளெல்லாம் - சங். *90 :14,15*) எண்ணிப் பார்த்து, அதிலிருந்து ஞானத்தைப் பெற்றுக் கொள்வதற்காக மனுகுலம் ஜெபம் பண்ணுவதைக் குறிப்பிடுகிறது. அதாவது மனுகுலமானது சாபத்தின் நாட்களை எண்ணிப் பார்க்கும்போது பாவத்தை வெறுக்க கற்றுக் கொள்ள வேண்டும். இழந்ததைத் திரும்பக் கொடுக்கும் நாட்களை எண்ணிப் பார்க்கும் போது நீதியை நேசிக்க கற்றுக் கொள்ள வேண்டும். பாவத்தை வெறுப்பது மற்றும் நீதியை நேசிப்பது என்பவைகள் மனுகுலத்திற்குரிய ஞானத்தின் இரு முக்கியமான உட்கூறுகளாக இருக்கின்றன. உண்மையான ஞானத்தின் ஊற்று தேவனுக்குப் பயப்படுகிற பயம் அல்லது போற்றிதுதிக்கும் பயபக்தி என்பதாகும் (சங். *111:10;* நீதி. *1:7*). மனிதனில் இவ்வித ஒரு போற்றி துதிக்கும் பயபக்தியை உருவாக்குவதே தீமை அனுமதிக்கப்படுவதின் நோக்கமென்று வச. *11*காண்பிக்கிறது.

*7.* சங். *90:11,12* வசனங்கள் பின்வரும் கருத்தை மிக தெளிவாகப் போதிக்கின்றன: மனுகுலத்திற்கு தேவன்மேல் போற்றிதுதிக்கும் பயபக்தியைக் கற்பிப்பதற்காகவே பாவமும் தீமையும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அது மற்ற காரியங்களுடன், பாவத்தை வெறுப்பதையும் அர்த்தப்படுத்தும். வச. *12*-ன் ஜெபம் (“நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள்

*நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித் தருளும்") இந்த வாழ்க்கையில் ஏறெடுக்கப்படுவதில்லை என்பது வெளிப்படையாக இருக்கிறது. ஏனென்றால் தெரிந்து கொள்ளப்படாத மனுகுலத்தார் அவர்களுடைய வாழ்க்கையின் முதன்மையான நோக்கமாகத் தேவனிடத் தில் போற்றி துதிக்கும் பயபக்தியை இந்த வாழ்க்கையில் நாடுவதில்லை. அவர்களுடைய வாழ்க்கையின் "எல்லா" நாட்கள் மற்றும் வருடங்களின் இரண்டாம் தொகுப்புக்கு (இழந்ததைத் திரும்பக் கொடுத்தலின் காலம் ) அவர்கள் வரும்போது இந்த ஜெபத்தை ஏறெடுப்பார்கள். இந்த நாட்களைக் குறித்து 14,15 வசனங்கள் சொல்கின்றன. இவைகள் 9,10 வசனங்களில் சொல்லப்பட்ட "எல்லா" நாட்கள் மற்றும் வருடங்களுக்கு எதிரிடையானவை களாக இருக்கின்றன.*

*8. வச. 3-ல் சொல்லப்பட்ட "திரும்புதலுக்காக" அதாவது இழந்ததைத் திரும்பக் கொடுத்தலுக்காக மனு குலம் ஜெபிப்பதாக வச.13 குறிப்பிடுகிறது ("கர்த்தாவே, திரும்பிவாரும், எதுவரைக்கும் கோபமாயிருப்பீர்? உமது அடியாருக்காகப் பரிதபியும்"). சாபத்தின் செயல் முறை யிலிருந்து மாற்றப்பட்ட ஒரு செயல்முறையாக ("அடியா ருக்காகப் பரிதபியும் – அடியாருக்காகத் திரும்பும்" என்பதே அதின் சரியான மொழி பெயர்ப்பாகும்) இழந்ததைத் திரும்பக் கொடுத்தலைச் செயல்படுத்த தேவனிடம் வேண்டுதல் செய்கிறது.*

*9. சங். 90:14 <u>நாங்கள் எங்கள் வாழ் நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்</u>. வச. 14-ல் மனுகுலத்தின் "வாழ்நாளெல்லாம்" என்பதின் சிறப் பியல்புகளாகக் கிருபையும், களிப்பும், மகிழ்ச்சியும் குறிப்பிடப்படுகின்றன. இந்த நாட்களெல்லாம் 9 மற்றும் 10 வசனங்களில் குறிப்பிடப்பட்ட நாட்கள் எல்லா வற்றிற்கும் முற்றிலும் வித்தியாசமானவைகளாக இருக்க வேண்டும். 9 மற்றும் 10 வசனங்களில் சொல்லப்பட்ட நாட்களில் சாபத்தின் துன்பங்கள் அனுமதிக்கப் பட்டிருந்தன. வச. 14-ல் சொல்லப்பட்ட "வாழ் நாளெல்லாம்", 9 மற்றும் 10 வசனங்களில் சொல்லப்பட்ட "நாட்களெல்லாம்" என்பவைகளுக்கு இடையிலுள்ள வித்தியாசம் இவ்வாறாயிருக்கிறது: (1) 9,10 வசனங்களில் சொல்லப்பட்ட "நாட்களெல்லாம்" என்பதில் தீமை ஆளுகை செய்யும் - சாபத்தின் காலம்; வச. 14-ல் சொல்லப் பட்ட "வாழ்நாளெல்லாம்" என்பதில் நீதி ஆளுகை செய்யும் - இழந்ததைத் திரும்பக் கொடுத்தலின் காலம். (2) 9 மற்றும் 10 வசனங்களின் "நாட்களெல்லாம்" என்பதில் தேவனுடைய கோபம் (சாபம்) துக்கத்தைக் கொண்டு வந்தது, ஆனால் வச. 14-ன் "வாழ்நாளெல்லாம்" என்பதில் தேவனுடைய கிருபை மகிழ்ச்சியையும் களிப்பையும் உண்டாக்கும்.*

*10. சங். 90:15 <u>தேவரீர் எங்களைச் சிறுமைப் படுத்தின நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக் கும்.</u> மனுகுலம் சிறுமைப்படுத்தப்பட்ட நாட்கள் சம்பந்த மாகவும், துன்பத்தைக் கண்ட(அனுபவித்த) வருஷங்கள் சம்பந்தமாகவும், தேவன் கொண்டிருந்த நோக்கத்திற்கு இணக்கமாக, இழந்ததைத் திரும்பக் கொடுத்தலின் செயல் முறைக்குள் வந்த மனுகுலத்திற்கு, இரட்சிப்பின் சந்தோஷங்கள் எவ்வாறு அளிக்கப்படுமென்று வச. 15 காண்பிக்கிறது. சாபத்தின் அனுபவத்திற்கு எதிர்மாறாக நீதியின் அனுபவத்தை மனுகுலம் பெற்றுக் கொள்ளும் போது, இன்னும் அதிக விரைவாக முழு மனதுடன் இழந்ததைத் திரும்பக் கொடுத்தலின் சந்தோஷங்களை அடைவார்கள் என்ற நோக்கத்திற்காகவே, தேவன் மனுகுலத்தைச் சாபத்திற்கு ஒப்புவித்தார் என்று இங்கே நமக்குத் திரும்பப் போதிக்கப்படுகிறது.*

*11. சங். 90:16 <u>உமது கிரியை உமது ஊழியக்கார ருக்கும், உமது மகிமை அவர்கள் பிள்ளைகளுக்கும் விளங் குவதாக.</u> வச. 16-ல் தேவனுடைய ஊழியக்காரர்களாகிய கிறிஸ்து வகுப்பார் நீதியின் அனுபவத்துடன், இழந்ததைத் திரும்பக் கொடுத்தலின் வேலையைச் செயல்படுத்த வேண்டுமென்று மனுகுலத்தார் ஜெபிக்கிறார்கள். அதன் மூலம் தெய்வீக ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமை என்ற இயல்புகளை அர்த்தப்படுத்துகிற தேவனுடைய மகிமையானது, நீதியின் அனுபவத்தினால் கிறிஸ்து வகுப் பாரின் மூலம் அளிக்கப்படும் இழந்ததைத் திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதத்தை மனுகுலத்திற்காகச் செயல் படுத்தும்.*

*12. சங். 90:17 <u>எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள் மேல் இருப்பதாக; எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும்; ஆம், எங் கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப் படுத்தியருளும்.</u> இறுதியாக, வச. 17-ல் அவர்கள் பின் வரும் காரியங்களுக்காக ஜெபிக்கிறார்கள்: (1) நீதியின் அனுபவத்தின் மூலம் மனுகுலத்தாரிடத்திலும் தேவ னுடைய மற்றும் கிறிஸ்துவினுடைய குணாம்சத்திற் கொத்த பரிசுத்தத்தின் அலங்காரம் (பிரியம் –KJV beauty – அழகு)அபிவிருத்தி செய்யப்பட வேண்டும், (2) அதின் விளைவாகப் பூமியின் மேலும், பூமியில் மனுஷனுக்குக் கீழ்ப்பட்ட எல்லா சிருஷ்டிகளின் மேலும் ஆதியில் அவனுக்கிருந்த ஆளுகை அவர்களுக்குத் திரும்பக் கொடுக்கப்பட வேண்டும். இதைத் திரும்பக் கூறுவதின் மூலம், அந்த ஜெபம் மேலும் உறுதிசெய்யப்படுகிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால், வச. 17ன் ஜெப மானது, மனுகுலத்தார் தேவனுடைய சாயலிலும் (தேவனுடைய குணாம்சத்திற்கொத்த குணாம்சம்) ரூபத் திலும் (தேவன் பிரபஞ்சத்தின் அதிபதியாயிருப்பதைப் போல், அவர்கள் பூமியின்மேல் அதிபதிகளாக இருக்கும் நிலை) திரும்பச் சிருஷ்டிக்கப்பட வேண்டும் என்று ஜெபிக்கிறது. இவ்வாறாக இந்த சங்கீதம் (1) ஆதியில் மனுகுலத்திற்கிருந்த பூரணநிலை, (2) வீழ்ச்சி, (3) சாபம், (4) தீமை அனுமதிக்கப்படுதல், (5) மில்லினிய யுகத்தின் இழந்ததைத் திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதங்களின் கீழ் மனுகுலம் தேவ தயவிற்கு அற்புதமாகத் திரும்ப வருவது ஆகியவற்றை போதிக்கிறது.*

★★★★★★★★★★★★★★★★★★★★★

# *ஏசாயா 35*

### *BS# 221, Aug 1954, p.62*

*1. ஏசா 35:1 <u>வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போலச் செழிக் கும்.</u> மில்லினிய யுகத்தில் முழு பூமியும் மறுசீரமைக் கப்பட்ட பரதீசாக மாறும்.*


*2. ஏசா 35:2 <u>அது மிகுதியாய்ச் செழித்துப் பூரித்து ஆனந்தக்களிப்புடன் பாடும்; லீபனோனின் மகிமையும், கர்மேல் சாரோன் என்பவைகளின் அலங்கார மும் அதற்கு அளிக்கப்படும்; அவர்கள் கர்த்தருடைய மகிமையையும், நமது தேவனுடைய மகத்துவத்தையும் காண்பார்கள்.</u> லீபனோன் என்ற வார்த்தையின் அர்த்தம் வெண்மை என்பதாகும். லீபனோனின் மகிமை அதற் களிக்கப்படும் என்பது ராஜ்யத்தின் நீதியைக் குறிக்கிறது.*

கர்மேல் என்ற வார்த்தையின் அர்த்தம் " மிகுதியாகக் கனி தருகிற ஒன்று" என்பதாகும். இது பரலோக ராஜ்யத்தின் காணக் கூடிய பூமிக்குரிய பகுதியாகிய மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களைக் குறிக்கிறது. சாரோன் என்ற வார்த்தையின் அர்த்தம் சமவெளி என்பதாகும். இது மில்லினிய யுகத்தின் ஒரு வித கருத்தில் தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பாரைக் குறிக்கிறது. அந்த வகுப் பாரைச் சேர்ந்தவர்களாவன: (1) யூத யுகத்தில் மூப்பரான பாத்திரவான்களாக ஆகுமளவிற்கு விசுவாச உண்மைத் துவமில்லாதவர்களாக இருந்தாலும், ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களில் தொடர்ந்து விசுவாசம் வைத்து, மோசேயின் உடன்படிக்கையைப் பற்றிக் கொண்ட இஸ்ரயேலர்கள், (2) சுவிசேஷ யுகத்தில் யெஷுஆவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுமளவிற்கு விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இல்லையென்றாலும் ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களில் தொடர்ந்து விசுவாசம் வைத்து, மோசேயின் உடன்படிக்கையைப் பற்றிக் கொண்ட இஸ்ரயேலர்கள், (3) யெஷுஆவை ரட்சகராக ஏற்றுக் கொண்டு, பிரதிஷ்டை செய்யவில்லை யென்றாலும், மீட்கும் பலிக்கும் நீதிக்கும் தொடர்ந்து விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருக்கிற யூதர் கள் மற்றும் புறஜாதியார்கள், (4) 1954 வருடத்திற்குப் பிறகு பிரதிஷ்டை செய்து, தொடர்ந்து விசுவாச உண்மைத்துவமாக இருப்பவர்கள் (பிரதிஷ்டை செய்த எபிப்பெனி பாளயக்காரர்கள். இவர்கள் அனைவரும் மூப் பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களின் வழி நடத்துதலின்கீழ் புறஜாதி உலகம் முழுவதையும் இழந் ததைத் திரும்பப் பெறும் வகுப்பாருக்குரிய விசுவாசத் திற்கும் நீதிக்கும் கொண்டு வருவார்கள். ஒரு வித கருத்தில் தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பார் பாத்திர வான்களுக்குக் கீழ்ப்பட்டிருப்பார்கள் என்பது, சாரோன் சமவெளியை விட கர்மேல் மலை உயரமான நிலை யிலிருப்பதின் மூலம் அடையாளப்படுகிறது. கர்த்த ருடைய மகிமை மற்றும் தேவனுடைய மகத்துவமென்பது பூரணமான ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமை ஒன்றோடொன்று இணைந்திருக்கிற தேவனுடைய குணாம்சத்தை அர்த்தப்படுத்துகிறது.

3. ஏசா 35:3,4 தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள். மனம் பதறுகிறவர்களைப் பார்த்து: நீங்கள் பயப்படாதிருங்கள், திடன் கொள்ளுங்கள்; இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்; அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல் லுங்கள். இவ்வசனம் இரண்டாம் வருகையின் காலத் திற்குச் சற்றுமுன் வாழ்ந்து கொண்டிருந்த சபை வகுப் பாரிடம் சொல்லப்படுகிறது. உபத்திரவ காலத்தில் சபை வகுப்பாரின் சத்துருக்களின் மேல் நீதியைச் சரி கட்டு வதற்காகவும், சபை வகுப்பாரை விடுவிப்பதற்காகவும் இரண்டாம் வருகையில் கர்த்தராகிய யெஷுஆவின் மூலம் தேவன் வருகிறபடியால் சபை வகுப்பார் பயப் படாமலிருக்க வேண்டுமென்று அவர்களுக்குக் கட்டளை யிடப்பட்டது.

4. ஏசா 35:5 அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டு போம். அப்பொழுது என்பது உபத்திரவ காலத்திற்குப் பிறகு வரும் மில்லினிய யுக கால பகுதியைக் குறிக்கிறது. அந்த காலத்தில் மனரீதியான குருடர்களாக இருந்த வர்களின் கண்கள் திறக்கப்படும், மதரீதியாகச் செவிடர் களாக இருந்தவர்களின் செவிகள் திறவுண்டுபோம்.

5. ஏசா 35:6 அப்பொழுது முடவன் மானைப்




போல் குதிப்பான்; ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்; வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறு களும் பாய்ந்தோடும். அக்காலத்தில் ஒழுக்க ரீதியாக முடவர்களாக இருந்தவர்கள் நீதியில் வேகமாகவும் உற்சாகத்துடனும் முன்னேறுவார்கள் (மானைப் போல). இக்காலத்தில் தேவனுடைய சத்தியத்தை அறிவிக்க திராணியற்றவர்களாக இருந்ததால் ஊமையாக இருந்த வர்கள் சத்தியத்தின் மாட்சிமையான இசைவிணக்கத்தை அறிவிப்பார்கள். ஏனென்றால் அக்காலத்தில் சத்தியமும் (தண்ணீர்கள்) தேவ வார்த்தையும் (ஆறுகள்) பூமியெங்கும் இருக்கும்.

6. ஏசா 35:7 வெட்டாந்தரை தண்ணீர்த் தடாக மும், வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும்; வலுசர்ப்பங்கள் தாபரித்துக் கிடந்த இடங்களிலே புல்லும் கொறுக்கையும் நாணலும் உண்டாகும். வெட்டாந்தரை என்பது சத்திய மில்லாதிருந்த நிலையைக் குறிக்கிறது. வலுசர்ப்பங்கள் தாபரித்து கிடந்த இடங்கள் என்பது தப்பறை மற்றும் தீமையால் நிறைந்திருந்த இடத்தை குறிக்கிறது. இவ் விடங்கள் சத்தியத்தினால் நிரப்பப்பட்டு, நற்பண்புகளில் விரைவாகவும் செழிப்பாகவும் வளரும் (புல்லும் கொறுக்கையும் நாணலும் உண்டாகும்.).

7. ஏசா 35:8 அங்கே பெரும்பாதையான வழி யும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழி யில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசை கெட்டுப் போவதில்லை. பெரும்பாதை என்பது பொது மக்கள் செல்வதற்குரிய பாதையாகும். இது இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பாருக்குரிய பொதுவான இரட்சிப்பின் வழியை நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறது. அது "ஒரு வழி" (ஒரு குறிபிட்ட இடத்திற்குக் கொண்டுசெல்லும் வழி - KJV பார்க்கவும்) என்றும் அழைக்கப்படுகிறது. அதாவது அந்த வழி இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பாருக்குரியதாக இருக்கும். அது பரிசுத்த வழி என்னப்படும். ஏனென்றால் ஜனங்கள் நியாயமாக்கப்படுவதையும் பரிசுத்தமாக்கப்படு வதையும் அந்த வழி கோரும். தொடர்ந்து அசுத்தமாக இருப்பவர்கள் (தீட்டுள்ளவன்) அந்த வழியைக் கடந்து போவதில்லை. நடந்து வருவதில்லை என்பது தவறான மொழி பெயர்ப்பாகும் - KJV பார்க்கவும். அதாவது

சீர்திருந்த மறுப்பவர்கள் அந்த பாதையின் முடிவு வரை செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. தங்கள் நாட்களை நன்மையினால் நிரப்பாததால், சிலர் நூறு வருடங்களின் முடிவில் அறுப்புண்டு போவார்கள், மற்றவர்கள் ஆயிர வருடங்களின் முடிவில் அறுப்புண்டு போவார்கள். அந்த பாதையானது அதில் நடப்பவர்களின் நலனுக்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கும். சத்தியம், நீதி மற்றும் பரிசுத்தத்தின் வழியில் நடக்க விரும்புகிறவர்களின் நலனுக்காகவே அந்த பாதை ஏற்படுத்தப்பட்டிருக்கும். அந்த பாதையில் நடப்பவர்கள் மிகவும் பேதையாயிருந்தாலும், அந்த பாதையில் திசை கெட்டு போவதில்லை. ஏனென்றால் அந்த பாதையில் சத்தியம், நீதி மற்றும் பரிசுத்தம் என்பவைகள் மட்டுமே மேலோங்கி இருக்கும். ஆகையால் அவர்கள் திசை கெட்டு போவதில்லை.

*8. ஏசா 35:9* அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை, அங்கே காணப்படவுமாட்டாது; மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள். இக்காலத்தில் மேலோங்கி இருக்கிற தீமை என்னும் சிங்கம் அந்த பெரும் பாதையிலிருக்க அனுமதிக்கப்படுவதில்லை. ஜனங்களின் நலனைக் கருதாத, சுயநலமான, எவ்வித தீமையான தாக்கமோ, எவ்வித தீமையான ஸ்தாபனமோ, எவ்வித தீமையான வியாபார நிர்வாகங்களோ, எவ்வித தீமையான ஆட்சி கழகங்களோ இருப்பதில்லை. துஷ்டமிருகங்கள் என்பது இவைகள் எல்லாவற்றையும் குறிக்கிறது. இவ்வித அமைப்பு எதுவும் அங்கே இருப்பதில்லை. மீட்கப்பட்டவர்கள் மட்டுமே, அதாவது அக்காலத்தில் எல்லோருக்கும் இலவசமாக அளிக்கப்படுகிற விடுதலையின் சந்தர்ப்பங்களைத் தங்களுக்கென்று பயன்படுத்திக் கொள்கிற, கிரயத்திற்குக் கொள்ளப்பட்டவர்கள் மட்டுமே இந்த மில்லினிய பெரும்பாதையில் நடப்பார்கள்.

*9. ஏசா 35:10* கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம். கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் என்பது, கர்த்தராகிய யெஷுஆவின் ரத்தத்தினால் கிரயத்திற்குக் கொள்ளப்பட்ட விழுந்து போன மனுகுலத்தில், மில்லினிய யுக நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிவதின் மூலம், விடுதலையைப் பெற்றுக் கொள்ளுகிறவர்களைக் குறிக்கிறது. அவர்கள் கல்லறையிலிருந்தும், பாவத்தினால் தேவனுக்கு அந்நியர்களாக ஆக்கப்பட்ட நிலையிலிருந்தும் திரும்பி, அக்காலத்தின் மதரீதியான அரசாங்கமாக இருந்து, உலகத்தைப் பிரகாசிப்பிக்கும் யெஷுஆ மற்றும் சபையினிடத்திற்கு (சீயோன்) வருவார்கள். அவர்கள் பாடும் பாடல்கள் தேவனுடைய ஊழியக்காரனான மோசேயின் மகிழ்ச்சியான பாடலாகவும், ஆட்டுக்குட்டியானவரின் பாடலாகவும் இருக்கும். அவர்கள் தலையின்மேலிருக்கும் நித்திய மகிழ்ச்சி என்பது, சத்தியம், நீதி மற்றும் பரிசுத்தத்திற்கிணக்கமாகத் தேவனோடும் கிறிஸ்துவோடும் நித்தியத்திற்கும் ஐக்கியங்கொள்வதின் சந்தோஷங்களைக் குறிக்கிறது. உண்மையாகவே அவர்கள் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் அடைவார்கள். சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம். அக்காலத்தில் எந்த காரியமும் அவர்களை துன்புறுத்தவோ, அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கவோ மாட்டாது என்று அறிந்து கொண்டு அவர்கள் மிகவும் சந்தோஷமாயிருப்பார்கள். அவர்கள் நித்திய ஜீவனின் சந்தோஷங்களையும், அதோடு வரும் மகிழ்ச்சியையும் அடைந்திருப்பார்கள். சாபத்தின் கீழிருக்கிற இக்காலத்தின் குறிப்பிடத்தக்க இயல்பாகிய சஞ்சலமும், சாபத்தினால் இக்காலத்தை நிரப்பி இருக்கிற தவிப்பும், அந்த மகிமையான ராஜாதி ராஜாவின் குணமாக்கும் முயற்சிகளினாலும், வல்லமைகளினாலும் ஓடிப்போம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

**இந்த நாள் நம்முடைய ஆண்டவருக்குப் பரிசுத்தமான நாள், விசாரப்படவேண்டாம்; கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான்.**

**நெகே. 8:10**

***உங்கள் கவனத்திற்கு***

சில கட்டுரை பகுதிகள்,
நமது அழைப்பிற்கும்,
இதுவரை கிடைத்த நிகழ்கால சத்தியத்திற்கும்
இணங்க, மாற்றம் செய்யப்பட்டுள்ளது

**புது உடன்படிக்கை**

*Monthly newsletter published by the brethren of the Millennial Bible Truth Movement*

*Website: www.mbtm.in*